632

KALANILAYAM. தனிப்பிரதி ரு. 0 3

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா	காரியாலயம்:—
உள் நாடு ரு. 7 8 0	வேளாளர் தெரு,
புற நாடு ரு. 9 0 0	புரசைபாக்கம் சென்னை.

Vol 4] 1931 ஹு பிப்ரவரி மீ 12உ [No. 6.

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 101
2. அப்பர் (அக்னி ஸ்தம்பனம்) E. N. தணிகாசல முதலியார் B.A. B.L. 103
3. சூளாமணி (உரையுடன்) நகரச்சருக்கம் (57—63) 105
4. யாப்பிலக்கணம் (அசை) 107
5. மானத சாத்திரம் (புலன்கள்) T. P. மீனாக்ஷிசுந்தரன் M.A., B.L. 110
6. கம்ப ராமாயணம் (கைகேசி சூழ்வினைப் படலம்) T. N. சேஷாசலம் B.A. B.L. 112
7. வர்த்தமானம் 119

கலா நிலயம்

188964

வாழ்வாங்கு வாழ்பவர்.

4.

எய்தினேன் யான் இது வென மகிழ்ந்தான்போல் இயங்குவானும், எய்தினல் இதைனை யான் பெரிது மகிழ்வே னென மயங்குவானும், அந்தரம் நோக்கில் எல்லாம் அவலச் சுவைக்கே பொருளாகி நிற்கின்றான். மாந்தாது இழிவை மதிக்கவேண்டு மாயின் அவர்தாம் மகிழ்கின்ற பொருள்களை நோக் குங்கள், என மேனாட்டுப் பொய்யில் புலவர்களில் ஒருவர் புகன்றிருக்கின்றார். இத்துணைப் பொருள் ஈட்டினேன் என மகிழ்கின்றான். ஒருவன், "சீச்சீ, மகிழ்வோய், இத்துணைதானோ நீ! பொருள் ஈட்டுவ தனினும் பெரியதோர் காரியம் உன் பெருமைக்கு இல்லையோ! எறும்புந்தான் தானியங்கள் கொண்டு சேர்த்துக் குவிக்கின்றது. நீ பிறந்து எறும்பின் மகிழ்ச்சியல்லால் பிறிதொன்று பெறுதற்கு உரிமை இழந்தது என்கொல்? பேதாய், உண்மையை உணர் வாயாயின் உன் பொருளினும் எத்தனையோ முறை உயர்ந்தவன் நீ. உன்னைக்கொண்டே மதிக்கக் கற் றிலாது பொருள்களைக்கொண்டு அளப்பதற்கு அவாவினையே. வஞ்சனை வெளிப்படாமல் கவர்ந் யாயினும், கரந்தனையாயினும் மகிழ்வாயேல் உன்னை என்சொலி வெறுப்பது. வஞ்சித்து நீ வென்றதிலும் பிறர் வஞ்சனைக்கு ஆளாகித் தோற்றாயேல் அதுவே, மைந்த உன் மானுடப் பெருமைக்கு உரியதென்று உணரஇயலாது நிற்கின்ற நின் இழிவைச் சற்றே தெளிந்து கொள்" என நம்மனோர்பால் அன்பினால் எவரேனும் இடித்துரைப்பாரேல், அன்னார்க்கு இந் நாள் நம் நன்றிக்கடனை ஆற்றி முற்றல் அரிது அரிது. வீடணன் வந்து அடைக்கலம்புகப் பாசறை யின் புறத்தே நின்றநாள், வள்ளல்இராமனுக்கு மந் திரம் உரைத்த வானரத்தலைவர்கள், "ஐய, அரக்க னவன் நின்பால் அணுகவும் ஒண்ணான். உறவாடி நின்னைக் கெடுப்பதல்லால் உறுபொருள் இதனில் தான் உளதோ! உறுதியிது, இன்னே அவனை ஒழித் திடுக" எனச் சாற்றியவேளை, பெருமைக்கெல்லாம் பேரணியாய எம்பிரான்,

> "பிறந்தநாட் தொடங்கி யாருந்
> தலைபுக்க பெரியோன் பெற்றி
> மறந்தநா ளுண்டோ வென்னைச்
> சரணென வாழ்கின் றானைத்
> துறந்தநாட் கின்று வந்து
> தன்னினான் சூழ்ச்சி யாலே
> இறந்தநா ளன்றோ வென்றும்
> இருந்தநா ளாவ தென்றான்"

இந்தப் பாசுரம் எவரது செவிதோறும் மயிர்க்கால் தோறும் உட்புகுந்து, உடலெலாம் தோலெலாம் ஊனெலாம், ஊறும் உதிரமெலாம், என்பினுட் டுளை யெலாம் பரவிப்பரவிப் பரவசமாக்கவில்லையோ அவரெ லாம், ஆண்டகை என்பதற்கு ஆளாவ தெப்படியோ! பிறரது சூழ்ச்சியால் இறப்பதே மேன்மையெனின் அதனின்று தன் மதிவலியால் தப்பினேன் என மகிழ் வான் சிறுமைக்கே சிந்தையளித்து உழல்கின்றான் என்று செப்பல் வேண்டுமே. பிறர் நமக்குத் தீமை புரிய நிற்குங்கால் அதனின்று தப்பியபோது தம் மதியையோ மற்றுவேறோர்விதியையோநினைத்துமகிழ் கின்றார் மக்களே போன்ற சில மாக்கள். அவர்களும் அதனுள் அடங்கிய தாழ்மையின் திறத்தை தெரிந்து கொள்ளா இழுதைகளே. குடரை மரக்கொம்பில் வைத்துத் தான் மறந்துவிட்டதாகச் சொல்லி இடங் கர்மாவிற்கு இரையாகாமல் தப்பிய குரங்கு சுமுகன் மகிழ்ந்தது எனில், அத்தகைய மகிழ்ச்சி குரங்கிற்கே

3L
ஹ2V, N28K1X
N31.4.6

உரியது என்பது தெரியாமல் மக்களில் எத்தனையோ பலர் இத்தகைய திறமைகளை வியந்துபோற்றிப் பாராட்டுகின்றனர். சுமுகனின் சிறுமை தெரியவேண்டுமெனின்,

> பேடையைப் பிடித்துத் தன்னைப்
> பிடிக்கவந் தடைந்த பேதை
> வேடனுக் குதவி செய்து
> விறகிடை வெந்தீ மூட்டிப்
> பாடுறு பசியை நோக்கித்
> தன்னுடல் கொடுத்தன பைம்புள்
> வீடுபெற் றுயர்ந்த வார்த்தை
> வேதத்தின் விழுமி தன்றோ.

என இராமனே வியந்த இச்சிறு பறவையின் மாபெருங் காவியத்தை மனத்தால் உய்த்துஉய்த்து உணர்ந்திருத்தல் வேண்டும். இப்பறவையின் கதையையும் உரைத்திரானேல் சோமசன்மா அக்குரங்கின் கதையை உரைத்த படுபழி தீருமா றெவ்வாறு.

முயன்று பெற்ற பட்டங்கள் ஒன்றிரண்டைக் கொண்டாடி மகிழ்வையெய்துவார் அதனினும் ஆயிரம் மடங்கு தன் சுயப்பெருமை இருந்தவாறுணராமல் உழல்கின்றாரே. தம்புகழ் கேட்டு மகிழ்வோர், ஆயிரம் நாவுடைய ஆதிசேடனாலும் உரைத்தற்கரிய பெருமை உடைத்து இயற்கை மானுடம் என்பது தேராத பேதையரே யன்றி வேறல்லர். வேலைக்கேற்ற கூலி கிடைத்தது என்று மகிழ்வாரை என் சொல்வது! "உழைத்தேன், உழைப்பிற்குரிய கூலி பெற்றேன்" என்று மகிழ்தலில் இழுக்குண்டோவென்று எண்ணலாம். "வேலைக்கேற்ற கூலிபெற வேண்டும்" என்பது மாநுட உரிமையாயிற்று என்று மேனாட்டோர்களும் அவர்களைத்தழுவிக் கழறும் பிறநாட்டவர்களும் பேசுகின்றார்களே; அது பெருவிடின் அழுங்கவேண்டாவோ எனச் சிறுமதி சில சீறலாம். எத்தனை கூலி கொடுத்தால் என்! செய்வோன்தன் சுயப்பெருமை எந்நாளும் அக்கூலியினும் உயர்ந்தது. எந்த உண்மை வேலையையும் கூலியால் ஈடுசெய்ய இயலாது. எனின், "என் உரிமையை அடைந்தேன்" என்று மகிழ்வோரெல்லாம் தம் பெருமையை அறியாதவர்களே ஆகின்றார்களாதலின் அம்மகிழ்ச்சியால் யாவர்க்குந் தாழ்மையே எஞ்சுகின்றது. நீ செய்யும் வேலை உண்மையாயின் அது விலையிடற்கரியது; அன்றதாயின் எவ்விலையும் வீண்; ஆதலின், இருதிறத்திலுங் கூலிகொள்வ தென்ப தெல்லாங் குறையேயன்றோ. ஞானமுனி எனத் தகும் ஆங்கிலப்புலவர் தாமஸ் கார்லைல் இக் கருத்துக்களை உட்கொண்டு பகர்ந்த வாசகமொன்று மந்திரம்போல் ஓதி ஓதி உய்யத்தக்கது:—

My brother, the brave man has to give his *Life* away. Give it, I advise thee; thou dost not expect to *sell* thy life in an adequate manner? What price, for example, would content thee? The just price of thy *Life* to thee—why, God's entire Creation to thyself, the whole Universe of space, the whole Eternity of Time, and what they hold: that is the price which would content thee; that, and if thou wilt be candid, nothing short of that! It is thy all; and for that thou wouldst have all. Thou art an unreasonable mortal—or rather thou art a poor *infinite* mortal, who in thy narrow clay-prison here, *seemest* so unreasonable! Thou wilt never sell thy Life, or any part of thy life, in a satisfactory manner. Give it like a royal heart; let the price be Nothing: thou *hast* then, in a certain sense, got All for it! The Heroic man—and is not every man, God be thanked, a Potential hero?—has to do so in all times and circumstances.

[தம்பி, வீரவாழ்க்கையன் தன்னுயிரை வழங்கிவிடவேண்டும். கொடையே புரிக; தக்கபடி உன் உயிரை விற்கவோ எதிர்பார்க்காதே. எந்த விலைதான் உனக்குத் திருப்தியாய்த் தோன்றும். உனக்கே உன் ஆயுளிற்கு நியாயமான விலை-கடவுள் படைப்புப் பொருளனைத்தும் நினக்கே, ஆகாயப் பெருவெளியனைத்தும், ஆதியந்த மென்ற அலகிலாக் காலமெல்லாம், இவைகளே உன் உயிரிற்குத்தகுந்த விலையென்று திருப்தியடைவாய்; அத்தனையும் வேண்டும்; உண்மையைச்சொல், அதனில் ஒரு அணுக்குறைந்தாலும் ஒவ்வுவாயோ. ஆம், அவ்வளவும் உனதே—அவ்வளவும் வேண்டுவாய். இன்னவிலை உனக்கீடாக எதிர்பார்ப்பது அநியாயமோ அன்றுஅன்று. அலகில்லா நீ, இச்சிறு உடற்சிறையில் அடங்கிக் கிடக்குங்கால், அநியாய விலை வேண்டுபவன் போல் தோற்றுகின்றய். உன் உயிர்வாழ்க்கையையேனும், அதனில் ஒரு பகுதியையேனும், உன்மனதிற்கிசைந்தபடி நீ ஒருபோதும் விற்கமாட்டாய். ஆதலால், அதனை வீறுசால் அரச இதயத்தோடு அளித்து விடு; விலை ஒன்றும் வேண்டா; அப்பொழுதுதான் ஒருவகையில், அதற்கீடாக எல்லாவற்றையும் பெற்றவனாவாய்!—வீர புருடன்,—புருடரில் ஒவ்வொருவரும் கடவுளருளால் வேண்டுமெனின் வீரராய் நிகழவல்லாரே—எப்பொழுதும் எவ்விடத்தும் அவ்வாறே புரிதல் வேண்டும்.]

ஆதலால், நம் உண்மைப் பெருமைக்குப் போதியது இந்நிலவுலக வரைப்பில் யாதுமில்லை. முன் இருந்ததையும் இப்பொழுது இருப்பதையும் ஒப்பு நோக்கி நினைக்கும்போதெல்லாம் ஒருவன் தான் எந்நாளும் இருக்கின்ற நிரந்தர மேன்மையை உணர்வானாயின் மகிழ்ச்சிக்குக் காரணம் சற்றேனும் இல்லையே. எது தான் வந்தெய்திற்றெனவும் இதனினும் அரிது பெரிது தனக்குரியதென்று உணரா இகழ்ச்சி உள்ளுறைந்து கிடக்கின்ற தென்பதை மறந்து மகிழ்கின்ற மாயம் வாழ்க்கையைச் சூழலாகாது. எவ்வளவு எய்தினும், அறைகடல் பனியினில் நிறையாதென்னும் வழக்கிற்கிணங்க, நம் சுயப் பெருமை நிறைவதில்லை என்பது தெளிந்தக்கால், வறள்வதில்லா அவ்வாரிதியேபோல் எதனை இழந்தாலும் நமக்குரிய பெருமை குறையாதென்னுங் கொள்கையும் உடன் தோன்றி, பெற்றிலேன் இதனை யென்றும், இழந்துளேன் இதனை யென்றும் மாந்தர் மாழ்குவதும் பொருளற்ற செய்தியாகும்.

தன்னைப்பற்றி எழுவது மகிழ்ச்சி யென்றும், ஒப்பு நோக்குங் குறிப்பே அதன் இயக்கம் என்றும், முன்னர்க் கூறியவற்றைக் குறிக் கொண்டு, பின்னர் அத்தகைய மகிழ்ச்சியில் அடங்கிய தாழ்மையையும் தேர்ந்தக்கால், மகிழ்தலே கருமமென்று வாழ்நாளைக் கைக்கொண்டார் ஒருவரும் வையத்தில் வாழ்வாங்கு வாழ்பவர் ஆகமாட்டார்—வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படவும் மாட்டார், சரதம்!

கலா நிலயத்தின் வளர்ச்சியைக் கருதி நமது துணை ஆசிரியர் ஸ்ரீமான் K. ராஜகோபாலன் அவர்கள் மலாய் நாடுகளுக்குப் பிரயாணமாவார். அக்காலை, அவரது கருமம் செவ்வனே முற்றும் வழி இயன்றன செய்து எமக்கு உதவி தருமாறு கலா நிலய நேயர்களையும், மற்றத் தமிழ் அன்பர்களையும் கேட்டுக்கொள்கின்றேன்.

ஆசிரியர்.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
சென்னை-600 008

அப்பர்

அப்பரும் அறுபத்திநான்கு கலைகளும்.

18. அக்கினி ஸ்தம்பனம்.

[84-வது பக்கத் தொடர்ச்சி]

> எல்லாஞ் சிவனென்ன நின்றாய் போற்றி
> யெரிசுடராய் நின்ற விறைவா போற்றி
> கொல்லா மழுவாட் படையாய் போற்றி
> கொல்லுங்கூற் றொன்றை யுதைத்தாய் போற்றி
> கல்லாதார் காட்சிக் கரியாய் போற்றி
> கற்றா ரிடும்பை களைவாய் போற்றி
> வில்லால் வியனரண மெய்தாய் போற்றி
> வீரட்டங் காதல் விமலா போற்றி

இக்கலையின் தோன்மை.

அக்கனி ஸ்தம்பனக் கலையை உலகவழக்கில் நெருப்புக்கட்டுவித்தை யெனக் கூறுவார். இக்காலத்திலும், யாதொரு கல்வி விவேகமற்றவர்களும், மூடபக்தியைக் கடைப்பிடித்து அக்கினியிற் பிரவேசித்து யாதொரு காயமின்றி வெளிவருவதும் நெருப்பைக் கையிலேந்துவதும் காண்கின்றோம். பதிவிரதா ஸ்திரீகள் கல்லாமலே இக்கலையைப் பெற்றுள்ளாரென்பது மேலோர் துணிபு. "நெருப்புக்குப் பயப்படும் பார்ப்பாலும், நீருக்குப் பயப்படும் பத்தினியும்" ஒன்று என்பர் நம்மனோர். நெருப்பில் பிரவேசித்துத் தங்கள் பரிசுத்தத்தை நிரூபிப்பது தொன்றுதொட்டு ஆரிய நாட்டிலும் தமிழ்நாட்டிலும் வந்த வழக்கமாம். பத்தினிக்கடவுள் என்னும் நாமம் வகித்த பல மாதர் நமது நாட்டிலிருந்தனரென்றும், அத்தகைய பெண்மணிகளைக் கண்டு அக்கினிபகவான் அஞ்சுவானென்றும் புராணங்கள் கூறும். இராமாயணத்தில் சீதை நெருப்பில் பிரவேசித்துத் தன் பரிசுத்தம் நிரூபித்தாளென்று காண்கின்றோ மன்றோ? அது நூதனமாய் இராமர் ஏற்படுத்திய வழக்கமென்று கூற இடமில்லை. முன்னோர் வழக்கத்தை அநுசரித்தே இராமரும் சீதையைத் தீயில் பிரவேசித்துப் பங்கமின்றி வெளிவந்து தன் கற்பழியாமையை நிரூபிக்கச் சொன்னது, கருமசீலரான இராமருக்குத் தகாத காரியமென எண்ணுவதற்கு இடமில்லை. சோதிவடிவாய சிவபெருமான் செடியா ராக்கைக்குத் துன்பப் பொருளேயன்றி அவ்வாக்கையின் திறம் அறவே யொழித்தவர்க்கு மிகவும் இனிய பொருளன்றோ?

> ஊழித்தீ யாய்நின்றாய் உள்குவா ருள்ளத்தாய்!
> வாழித்தீ யாய்நின்றாய்! வாழ்த்துவார் வாயானே
> பாழித்தீ யாய்நின்ற படர்சடைமேற் பனிமதியம்
> ஆழித்தீ யையாறர்க் காளாய்நா னுய்ந்தேனே
>
> அப்பர் திருவையாறு-பண்-பழந்தக்கராகம் 4.

என்னும் திருப்பாசுரங் காண்க.

இக்கலையின் அமைதி.

அக்கினியானது நீரை உட்கொண்ட பூதமென்பர். அதாவது ஆகாய தத்துவத்தில் மண்முதல் நான்கு பூதங்களும், வாயு தத்துவத்தில் மண் நீர் நெருப்பென்னும் முப்பூதங்களும், நெருப்பில் மண்ணும் நீரும், நீரில் மண்ணும், வெளிவருவதும்ஒடுங்குவதும் இருவினைகளாய் மேலோர் காட்டுவது தேவாரத்திலும் காணலாகும். ஒடுங்கும் காலத்தில் பாரிடை ஐந்தானது, நீரிடை நான்காய், தீயிடைமூன்றாய் வளியிடையிரண்டாய் வெளியிடை யொன்றாய் இயற்கையிற் காணப்படும். இதைப் புறச்சமயத்தாரும் நம்புவர்.

> பூநி லாய வைந்து மாய்ப்பு னற்க ணின்ற நான்குமாத்
> தீநி லாய மூன்று மாய்ச்சி றந்த கால்இ ரண்டுமாய்
> மீநி லாய தொன்று மாகி வேறு வேறு தன்மையாய்
> நீநி லாய வண்ண நின்னை யார் நினைப்ப வல்லரே?
>
> திருமழிசையாழ்வார் திருச்சந்தவிருத்தம்.

இக்கருத்தைத் திருவாசகத்தில் மணிவாசகப்பெருமான், போற்றித் திருவகவலில்,

> வானகத் தமரர் தாயே போற்றி!
> பாரிடை யைந்தாய்ப் பரந்தாய் போற்றி
> நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி
> தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி
> வளியிடை யிரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி
> வெளியிடை யொன்றாய் விளைந்தாய் போற்றி
> அறிபவ ருள்ளத் தமுதே போற்றி.

என விளக்குவதைக் காண்க.

"தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி" என்பதில் தீயிடையே அப்பூதத்தை யடக்கவல்லார் தீயின் பயனும், நீரின் பயனும், மண்ணின் பயனும் சிறக்க அநுபவிக்கலா மென்பதுமாம். திருநாவுக்கரசுநாயனாரை நீற்றறையில் சமணரிட அங்கு ஒருவாரம் நெருப்பிலிருந்து வெளிவரும் அடிகள் சிவபெருமான் அடியாருடன் வந்துநிற்கும் திறம் இன்னதென்று உணர்ந்தனர். அதாவது,

> தீயாகி நீராகித் திண்மை யாகித்
> திசையாகி யத்திசைக்கோர் தெய்வ மாகித்
> தாயாகித் தந்தையாய்ச் சார்வு மாகித்
> தாரகையு ஞாயிறுந் தண்மதியு மாகிக்
> காயாகிப் பழமாகிப் பழத்தி னின்ற
> விரதங்க ளுகர்வானுந் தானே யாகி
> நீயாகி நானாகி நேர்மை யாகி
> நெடுஞ் சுடராய் நிமிர்ந்தடிக ணின்ற வாறே.
>
> நின்ற திருத்தாண்டகம் 5.

"நீயாகி - நானாகி," நெடுஞ்சுடராய் நிற்கும் நிலையில் தீயும் நீராக மாறுமென்பதற்கு ஐயுறவுண்டோ? சிவபெருமான் திருவுருவத்தில் மூழ்கித் திருமந்திரம் இடைவிடாது செபித்து நான் என்னும் நிலையற்றுத் தன்னுருவமும் செவ்வனே சிவபெருமான் செழுஞ்சுடர்போல் கலந்து விளங்குங்கால நீற்றறையிலிருக்கும்தீயானது குளிரைத் தருமென்பதற்கும் ஏதேனும் சந்தேகம் உண்டோ. இதனால், வெளிவந்த அப்பரும்

> மாசில் வீணையும் மாலை மதியமும்
> வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
> மூசு வண்டறைப் பொய்கையும் போன்றதே
> ஈச னெந்தை யிணையடி நீழலே!
>
> தனித் திருக்குறுந்தொகை

இவ்வாறு பரிசுத்த செழுஞ்சுடரனைய அப்பரது திருவுருவத்தை நீற்றறையின் தீயானது சுடவில்லையே யன்றி நடலை வாழ்வில் கட்டுப்பட்டு ஈசனடியில் எப்போதோ ஒருகாலத்தில் நினைவுபெறும் நமக்குக்கது கடுந்தீயன்றோ? அப்பர் வெளிவந்தபோது கண்டோர் இது என்ன இந்திரசாலமென்று எண்ணுவார் களோ என்று கருதி, தான் அறிந்துசெய்த வித்தை இதுதானென்று அமணர் அறியும்வண்ணம் இரண்டாவது பாசுரத்தில் இவ்வித்தைக்கு அடிப்படையான மூலபலம் இஃதாகுமென்று விளக்குவாராயினர். அதை 2-ம் பாசுரத்தில் அப்பதிகத்திலேயே காணலாம்:—

நமச்சி வாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சி வாயவே நானறி விச்சையும்
நமச்சி வாயவே நாநவின் றேத்துமே
நமச்சி வாயவே நன்னெறி காட்டுமே!

தனித் திருக்குறுந்தொகை

இவ்வாறு பஞ்சாட்சர உருவாகிய சிவனுருவில் மூழ்கியவர் ஞானமும் எல்லாக் கல்வியும் கல்லாமலே பெறுவதற்குக் காரணம் யாதெனில், சிவபெருமான் தனக்கு ஆளானார்க்குத் தான் ஆளாவார் என்பதாம். ஆதலால் உலகத்தில் உள்ள பல விஷயங்களும் பொருள்களும் வெளிப்படையாயிருப்பினும் அவற்றைச் சொன்னாலும் காதில் நுழைபாமல் தோளாச் சுரையனைய மாந்தர் வாளா மாய்ந்து மண்ணாகிக் கழிக்கின்றாரே என விரங்கி,

நடலை வாழ்வுகொண் டென்செய்திர் நாணிலீர்!
சுடலை சேர்வது சொற்பிர மாணமே
கடலி னஞ்சமு துண்டவர் கைவிட்டால்
உடலி னார்கிடந் தூர்முனி பண்டமே.

பூக்கைக் கொண்டான் பொன்னடி போற்றிலார்
நாக்கைக் கோண்டர னும நவில்கிலார்
ஆக்கைக் கேயிரை தேடி யலமந்து
காக்கைக் கேயிரை யாகிக் கழிவரே.

குறிக ளும்மடை யாளமுங் கோயிலும்
நெறிக ளும்மவர் நின்றதொர் நேர்மையும்
அறிய வாயிர மாரண மோதினிம்
பொறியி லீர்மன மென்கொல்பு காததே.

தனித்திருக்குறுந்தொகை. 4, 5 & 6.

என உலகவாழ்க்கையில் ஆழ்ந்து உழலும் பண்டித பாமர ஜனங்களுக்கு விளக்கும் மேற்கண்ட பாசுரங்களுக்குப் பின்னர், தன் வாழ்க்கையில் தவறிக்கிடந்த சிறு பிழையையும் பெரும் பிழையாகக் கொண்டு வருந்துவதையும் காண்க.

வாழ்த்த வாயு நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியுந் தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்த வாவினை யேனெடுங் காலமே!

எழுது பாவைநல் லார்திறம் விட்டுநான்
தொழுது போற்றிநின் றேனையுஞ்சூழ்ந்துகொண்
டுழுது சால்வழி யேயுழு வான்பொருட்
டிழுதை நெஞ்சமி தென்படு கின்றதே.

தனித் திருக்குறுந்தொகை 7-8.

என்று வருந்தித் தனது சுவாநுபவத்தை வெளியிடுகின்றார்:—

நெக்கு நெக்கு நினைபவர் நெஞ்சுளே
புக்கு நிற்கும் பொன்னார் சடைப் புண்ணியன்
பொக்க மிக்கவர் பூவுநீ ருங்கண்டு
நக்கு நிற்ப ரவர்தம்மை நாணியே.

விறகிற் றீயினன் பாலிற் படுநெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவு கோனட் டுணர்வு கயிற்றினால்
முறுக வாங்கிக் கடைய முன்னிற்குமே

தனித் திருக்குறுந்தொகை 9 & 10.

இருதய கமலத்தில் வீற்றிருக்கும் சிவபெருமான் பாலில் உள்ள வெண்ணெய்போல் கலந்திருப்பினும் உறவாகிய கோலைநட்டு உணர்வாகிய கயிற்றால் முறுக்கிக் கடையவும் அவன் வெளியே வெண்ணெய் திரண்டு வருவதுபோல் மேல்வருவானாயின் ஊழித்தீயாயினும் சரி, இச் சோதித்தீயால் கவரப்பட்டவரை ஒன்றும் செய்ய முடியாதென்பதை அமணருக்கு அப்பர் அறிவித்தார். இதையே மற்றோரிடத்திலும்,

என்னை யேது மறிந்தில னெம்பிரான்
தன்னை நானுமுன் னேது மறிந்திலேன்
என்னைத் தன்னடி யானென் றறிதலும்
தன்னை நானும் பிரானென் றறிந்தேனே.

தெள்ளத் தேறித் தெளிந்து தித்திப்பதோர்
உள்ளத் தேற லமுத வொளிவெளி
கள்ளத் தேன்கூடி யேன்கவ லைக்கடல்
வெள்ளத் தேனுக் கெவ்வாறு விளைந்ததே

தனித்திருக்குறுந்தொகை 8 & 10.

அப்பர் காலத்தியவர் பலர் இக்கலை வல்லுநர்.

நெருப்பைக் கட்டுவது சமணர் மிகவும் சாமானிய வித்தை என்றே எண்ணினர். சம்பந்தர் தீயிலிட்ட பச்சோலை அழியாது நின்றது இக்கலையின் திறமென்றே அவர்கள் மொழிந்ததிலும் உண்மை யிருக்கிறதென்பது திண்ணம். ஆனால் சமணர் பயின்ற மந்திரமும் முறையும் தவறு. அதனால் அவர்களிட்ட ஓலை யெரிந்து சாம்பலாயிற்று. அக்கினிகட்டும் வித்தை யவர்களிடமில்லாவிடின், அப் பரிட்சைக்கு அவர் ஒவ்வார். திருஞானசம்பந்தர் மந்திரவலிவானது தனது ஓலையைக் காத்ததுமன்றிச் சமணர் ஓலையையும் அழித்தது. இம்மந்திர மாட்சிமை சம்பந்தர் மடத்தைச் சுற்றிலும் சமணர் தீ யிட்டபோது, இது "பையவே சென்று பாண்டியற்காகவே" என அத்தீயானது அரண்மனைக்குச் சென்று பாண்டியன் உயிருக்குக் கெடுதி விளைக்காது அவனை வருத்தியதென்று பெரிய புராணம் கூறும். எரியும் தீயை இடம்விட்டு மாறி வேறு இடத்தில் எரியவும் குணம்மாறி நிற்கவும் புகலி வேந்தர் திருவாக்காக்கியதென்றால் இக்கலை எவ்வளவு முதிர்ந்திருக்கவேண்டு மென்பதை நாம் எளிதில் அநுமானிக்கலாகும்.

துஞ்சும் போதுஞ் சுடர்விடு சோதியை
நெஞ்சு ணின்று நினைப்பிக்கு நீதியை
நஞ்சு கண்டத் தடக்கிய நம்பனை
வஞ்ச னேனினி யான்மறக் கிற்பனே.

மறக்கிற்பனேயென்னுந் திருக்குறுந்தொகை 8.

தோலாமொழித்தேவர் இயற்றிய

சூளாமணி

[92-வது பக்கத் தொடர்ச்சி]

2. நகரச் சருக்கம்.

57. கொதிநுனைப் பகழியான் குறிப்பி னல்லதொன்
றிதுநமக் கிசைக்கென வெண்ணு மெண்ணிலா
நொதுமலர் வெருவுறு நுவற்சி யானபின்
னதுவவன் பகுதிக ளமைதி வண்ணமே. 23.

கொதி - கொதிக்கின்ற, நுனை - நுனியையுடைய, பகழியான் - அம்புகளையுடைய அரசனுடைய, குறிப்பின் அல்லது - குறிப்பிற்குப் பொருந்தாத, ஒன்று இது - இது ஒன்றை, நமக்கு - எங்களுக்கு, இசைக்க என - சொல்லுங்கள் என்று கூறவேண்டுமென்று, எண்ணும் - நினைக்கின்ற, எண் இலா - கருத்தில்லாத, நொதுமலர் - அயலார், வெரு உறு - அஞ்சாமல், நுவற்சி ஆனபின் - சொல்ல நேர்கின்றதென்றால்; அது - அத்தகைய மேன்மை, அவன் அவ்வரசனுடைய, பகுதிகள் - தன்மைகள், அமைதி வண்ணம் - அமைகின்ற விதமாகும்.

"அரசனுடைய கருத்திற்கு விரோதமானதொன்றை எங்களுக்குச் சொல்லுங்கள்" என்று கேட்கவேண்டும் என்னும் எண்ணங்கூட இல்லாதவராகிய அயலார் அப்படி யேதேனும் சொல்லவேண்டுமாயின் அதனை அஞ்சாமற் சொல்லலாம்—தனக்கு விரோதமாகச் சொல்கின்றார்களே என்று அரசன் அவர்களுக்கு யாதுந் தீது செய்யான்—என்றால், அவனுடைய பெருந்தன்மை இருந்தவாறு இவ்வாறு—எனப் பொருள்கண்டோம் எனினும், இதனினுந் தெளிந்தபொருள் வேறு இச்செய்யுளிற்கு இருப்பினும் இருக்கலாம்.

'எண்ணிலா நொதுமலர்' என்பதனினும், 'எண்ணிலான் நொதுமலர்' என்பது பாடமாயின் இச் செய்யுளின் பொருள் சிறிது சிறக்குமென எண்ணுகின்றோம். அப்பொழுது:—

கொதி - கொதிக்கின்ற, நுனை - நுனியையுடைய, பகழியான் - அம்புகளையுடைய அரசன், "இது நமக்கு நல்லது - இது என்னுடைய நன்மைக்குரிய காரியம், (ஆதலின் அதனை), குறிப்பின் இசைக்க - குறிப்பாகச் சனங்களிடம் சொல்லுங்கள்" என - என்று தன் அமைச்சர் முதலானவர்களிடம் சொல்லவேண்டுமென்று, எண்ணும் - நினைக்கும், எண்ணிலான் - கருத்து இல்லாதவன். நொதுமலர் - அயலார்களோ, வெருவுறு - அஞ்சாமல், நுவற்சி ஆனபின் - தங்கள் கருத்தை அரசனிடஞ் சொல்லிக்கொள்ளக் கூடியவர்களாயிருக்கின்றார்கள் என்றால், அது - அத்தகையது, அவன் பகுதிகள் அமைதி வண்ணமே - அவனுடைய அரசியல்தன்மைகள் அமைந்திருந்த வண்ணம்.

அரசன் ஒருநாளும் தன் சுயநலத்தைத் தேடினவனல்லன். குடிகளைக்கொண்டு தான் எவ்வித நன்மையும் தனக்கென்று தேடிக்கொள்ள நினைத்திலன். அமைச்சர் முதலானவர்களை அழைத்து, "என்னுடைய நன்மைக்கு இக்காரியம் முடியவேண்டும்; அதனைச் சனங்களிடம் சொல்லி அவர் செய்து தரும்படி சூழுங்கள், ஆனால் வெளிப்படையாகச் சொல்லாமல் குறிப்பாகச் சொல்லுங்கள்" என்ன வேண்டுமென்று அவன் ஒருநாளும் எண்ணியதும் இல்லை. நொதுமலர்—அவன் நண்பர்களென்பதன்றி அயலார்களுங்கூட, நீதி எதுவோ அதை அஞ்சாமல் அவனிடம் சொல்லிக்கொள்ளக்கூடிய உரிமையுடையவரா யிருந்தனர். எனின் அவனரசியல் பெருமை விளங்கவில்லையா—என்கின்றார் கவி.

"தலைமகன் வெகுண்டபோதும் வெம்மையைத் தாங்கிநின்று நீதி விடாதுரைக்கும் வீரர்" என்று கம்பர் தயரதனது அமைச்சர்களைப் புகழ்ந்தார். அமைச்சர்களன்றி நொதுமலர்களும் அத்தகையவர்களே என்கின்றார் தேவர். இங்கு அரசனும் வெகுளான், வெகுண்டாலும் நொதுமலர் அஞ்சார்.

'நொதுமலர்' என்பது பகையும் நட்புமில்லாமல் பொதுமைநோக்குவோரைக் குறிக்கின்றது.

இது நமக்கிசைக்கென-என்பதை 'நமக்குஇசைக்கு என'ப் பிரித்து 'இது நம்முடைய கீர்த்திக்கு' என்று பொருள்கொண்டு,' குறிப்பின் நல்லது ஒன்று' என்பதற்கு "இதைச் சனங்களுக்குக் குறிப்புணர்த்துவார்களாயின் நல்லதாம்' என்று பொருள்கூட்டினுங் கூட்டலாம்.

---

58. மற்றவன் றேவியர் மகர வார்குழைக்
கொற்றவர் குலங்களை விளங்கத் தோன்றினா
ரிற்றதிம் மருங்குலென் றிரங்க வீங்கிய
முற்றுரு முலையினார் கலையின் முற்றியார். 24.

(மற்று - அசை) அவன் தேவியர் - அந்தப் பயாபதியின் மனைவிமார், (எத்தகையவர் எனின்), மகர வார் குழை - நீண்ட மகரகுண்டலங்களை அணிந்த, கொற்றவர் - வேந்தர்களது, குலங்களை - குலங்களை, விளங்க - விளங்கச் செய்ய, தோன்றினார் - பிறந்தவர். இற்றது இ மருங்குல் என்று-(இவர்களது இடுப்பின் நுண்மையைக் கண்டவர்) 'இந்த இடுப்பு உடைந்தது' என்று, இரங்க - இரக்கம் கொள்ளும்படி, வீங்கிய - பூரித்த, முற்று உரு - முற்றுருத இளமை - வாய்ந்த, முலையினார்-முலைகளை யுடையவர். கலையின்-(எல்லாக்) கலைகளின் அறிவிலும்,முற்றியார் - முதிர்ந்தவர்.

குலங்களை - அவ்வவர் பிறந்த குலங்களை என்று பொருள் கொள்ளலாமாயினும், பிறந்த குலம் புகுந்த குலம் என இருகுலங்களையும் குறித்ததாகக் கொள்வதே சிறப்பு. குலங்களை விளங்க, என்பதில் குலங்கள் என்பது இரண்டாம் வேற்றுமை உருபு பெற்று மயங்கியதென்றேனும் அல்லது ஐ வேண்டாவழிச் சாரியை யென்றேனும், இல்லையேல் விளக்க என்பது விளங்க என்று மெலிந்து நின்றதென்றேனும் கொள்ளலாம்.

இற்றது:—'இறும்' என்று எதிர்காலமா யிருக்க வேண்டியது இற்றது என இறந்தகாலமாயிருத்தல் மிகுதியாலேனும் தெளிவினாலேனும் வந்த காலவழு அமைதி. முலையின் பாரத்தால் இடுப்பு ஒடியுமே யென்று கண்டவர் இரங்குவதை, "மிடல்புக் கடங்

காத வெம்முலையோ பார மிடர்புக் குகு மின்னிடையிழவல் கண்டாய்'' எனவரும் சிலப்பதிகாரச் செய்யுளாலு மறியலாம்.

மகரக்குழை - மகரவடிவாய காதணியும் அதனின்று தொங்கும் குண்டலமுமாம். 'குண்டலக் கோலமைந்தர்' என்று கம்பர் கூறுவதால் ஆடவரும் குண்டலம் தரித்தாரென்பது பெறப்படுகின்றது.

---

59. பஞ்சனுங் கடியினர் பரந்த வல்குலார்
செஞ்சுணங் கிளமுலை மருங்கு சிந்தினர்
வஞ்சியங் குழைத்தலை மதர்வைக் கொம்புத
மஞ்சுட ரிணர்க்கொசிந் தனைய வைம்மையார் 25

பஞ்சு - பஞ்சுபட்டாலும், அனுங்கு-வருந்துகின்ற, அடியினர்- (மெல்லிய) பாதங்களையுடையவர், பரந்த-அகன்ற, அல்குலார் - அல்குலை யுடையவர். செம் - சிவந்த, சுணங்கு- தேமல் படர்ந்த, இளமுலை - இளமுலைகளின் பாரத்தால் (தம்), மருங்கு - இடுப்பை, சிந்தினர் - உதிர்த்துவிட்டவர். வஞ்சி - வஞ்சியின், குழைத்து-தளர்ந்து, அலை - அசைகின்ற, மதர்வை - செழிப்பமைந்த, கொம்பு-கிளைகள், தம் - தமது, அம்சுடர் - அழகிய பிரகாசமான, இணர்க்கு - பூங்கொத்திற்கு (ஆற்றாது), ஒசிந்து அனைய - அசைவதைப் போன்ற, ஐம்மையார்-மென்மைத்தன்மை யுடையவர்.

பஞ்சனுங் கடியினர் - பஞ்சிற்கு மாற்றாத பாதத்தினர் என்பது கருத்து. செஞ்சுணங்கு இளமுலை மருங்கு சிந்தினர்—இதற்கு வேறுசில பொருள்களும் கூறலாம். (1) செம்மையான சுணங்காகிய செல்வத்தை இளமுலையில் சொரிந்திருப்பவர். இங்கு மருங்கு என்றால் செல்வம் என்று அர்த்தம். இப்பொருளில் மருங்கு என்னும் சொல், "அருங்கொடைத் தானமாய்ந்த வருந்தவந் தெரியின் மண்மேல் மருங்குடையவர்க் கல்லான் மற்றையர்க் காவதுண்டோ'' என்று சிந்தாமணியில் வந்துளது. 'பொன்' என்பதற்கும் 'பொருள்' என்பதற்கும், சுணங்கு என்று ஒரு அர்த்தமிருப்பதால் இங்குச் சுணங்காகிய செல்வத்தை முலையில் பெற்றவர், எனக் கொள்வ தமையும். (2)செம்மையான சுணங்கை இளமுலைகளின் பக்கத்தில் சொரியப்பெற்றிருப்பவர். மருங்கு - பக்கம். இவ்விரண்டு பொருள்களினும் 'சிந்தல்,' என்றதற்குச் சொரிதல் அல்லது தெளித்தல் என்றுஅர்த்தம். ஆனால் தேவியர் நொய்ம்மையையே இச்செய்யுள் விளக்கியதாதலால் 'முலையால் தளர்ந்து உகும் இடை' யெனும் பொருளே பொருந்தும்.

வஞ்சியங் குழைத்தலை - 'அம்' என்பதை அசையாக விலக்கிப் பொருள்கொண்டோம். அல்லாது (1) வஞ்சி அங்கு உழைத்து அலை - வஞ்சியின் உழைத்து அலைகின்ற; அங்கு - அசை. (2) வஞ்சி அம் குழைத் தலை - வஞ்சியின் அழகிய தளிரோடு கூடிய நுனியை உடைய; குழை - தளிர். என இவ்விரு பொருள்களும் அமையும். பூவின் பாரத்திற்கே ஆற்றாது தளர்கின்ற கொம்புபோல் நுடங்கும் மெல்லியலார் இம்மாதர் என்பது கருத்து.

---

60. காமத்தொத் தலர்ந்தவர் கதிர்த்த கற்பினர்
தாமத்தொத் தலர்ந்துதாழ்ந் திருண்ட கூந்தலார்
தூமத்துச் சுடரொளி துளும்பு தோளினர்
வாமத்தின் மயங்கிமை மதர்த்த வாட்கணர். 26.

(அம்மாதர்), காமம் - காமநீர் பாய்ச்சி வளர்த்த, தொத்து - பூங்கொத்தைப்போல், அலர்ந்தவர் - மலர்ந்தவர். கதிர்த்த கற்பினர் - (அம்மலர் முதிர்ந்து) கற்பு எனும் கதிர் பழுத்தவர். தாமம் - மாலையினது, தொத்து-பூங்கொத்து, அலர்ந்து-மலர்ந்து, தாழ்ந்து-நீண்டு, இருண்ட - கரிய, கூந்தலார் - கூந்தலையுடையவர். தூமத்து - வாசனையோடு கூடிய, சுடர் - தீக்கொழுந்தின், ஒளி- பிரகாசம், துளும்பும் - ஆடுகின்ற, தோளினர் - தோள்களையுடையவர். வாமத்தின் - அழகோடு, மயங்கு - மயங்குகின்ற, இமை - இமைகளுடன் கூடிய, மதர்த்த - களித்த, வாள் கணர் - வாள்போன்ற கண்களையுடையவர்.

காமத் தொத்தலர்ந்தவர் - காமநீர் பாய்ச்சி வளர்ந்த பூங்கொத்தைப் போன்று மலர்ந்தவர். 'காமநீர்ப் புதுத்தளி ரனையவள்' என்று குணமாலையைத் திருத்தக்கதேவர் அழைப்பதற்கு நச்சினார்க்கினியர், 'காமநீரால் வளர்ந்த தளிர்'' எனப் பொருள் கூறுவர். இனிப் 'பெண்மை என்னும் தன்மை காமமாகிய மலர் பூத்தது போன்றவர்' எனப் பொருள்கூறினும் அமையும்.

கதிர்த்த கற்பினர் - 'விளங்கிப் பிரகாசிக்கும் கற்புடையவர்' என்று பொருள் உரைக்கலாம். எனினும் காமத்தால் அலர்ந்தவர் என்றதற் கேற்ப, அம் மலர் ஈன்றது கற்பெனும் கதிரையே, என்றுணர்வது சிறப்புடைத்தாம்.

தூமத்துச்சுடரொளி - நாவியின் மணமும் சுடரின் ஒளியும் கூடிய தோளினர் ஆதலால். தூமம் - இங்கு வாசனை.

---

61. ஆயிர ரவரவர்க் கதிகத் தேவியர்
மாயிரு விசும்பினி னிழிந்த மாண்பினர்
சேயிருந் தாமரைத் தெய்வ மன்னரென்
றேயுரை யிலாதவ ரிருவ ராயினர். 27.

(அவ்வரசனுக்கு), அவர் - அத்தகைய மனைவியர், ஆயிரர் - ஆயிரம்பேர். அவர்க்கு-அவர்களில், அதிக தேவியர் - சிறந்த பட்டமனைவியர், மாஇரும் - மிகப்பெரிய, விசும்பினின்-தேவலோகத்தினின்று, இழிந்த-இறங்கிவந்து அவதரித்த, மாண்பினர் - பெருமையுடையவரும், சேய் - இளமைபொருந்திய, இரும்-பெருமையுடைய, தாமரை-செந்தாமரை வெண்டாமரைகளில் வசிக்கும், தெய்வம் - இலக்குமி சரச்வதியென்னும் தெய்வங்கள், அன்னர் என்றே- போன்றவரையேபோல், உரை இலாதவர் - உரைத்தற்கு ஒண்ணாத சிறப்புவாய்ந்தவரும் ஆகிய, இருவர் ஆயினர் - இருவர் ஆனர்.

மாயிரு-உரிச்சொற் புணர்ச்சியாதலால் யகர உடன்படுமெய் தோன்றியது. அவர்க்கு, என்பதில் 'கு' எல்லைப்பொருள் நான்காம் வேற்றுமை என்றாவது,ஏழாம் வேற்றுமையோடு மயங்கிய தென்றாவது கொள்ளலாம். சேயிருந்தாமரை - செந்தாமரை யெனின், திருமகளையே குறிக்குமாதலால், மனைவர் இருவர் என்றதையும், பின் 30-வது செய்யுளையும் கருதிச் 'சேய்' என்றதற்கு இளமை, புதுமை, எனப் பொருள் கொண்டோம்.

வேறு.

62. தீங்கரும் பமிழ்த மூட்டித்
தேனளாய்ப் பிழிந்த போலு
மோங்கிருங் கடலந் தானை
வேந்தணங் குறக்கு மின்சொல்
வீங்கிருங் குவவுக் கொங்கை
மிகாபதி மிக்க தேவி
தாங்கருங் கற்பிற் றங்கை
சசியென்பாள் சசியொ டொப்பாள் 28.

ஓங்கு இரும்-ஓங்கிஅகன்ற, கடல் அம்தானை-கடல் போன்ற அழகிய சேனையை உடைய, வேந்து- அரசனுக்கு, தீம் கரும்பு - மதுரமான கரும்பிற்கு, அமிழ்தம் ஊட்டி - அமிர்தத்தைப் புகட்டி, தேன் அளாய்- தேனையும் கலந்து, பிழிந்த போலும் - பிழிந்ததைப் போன்று, அணங்கு உறக்கும் - ஆசையைப் பெருக்கும், இன்சொல் - இனிய மொழியையும், வீங்கு இரும் - உயர்ந்து பருத்தனவும், குவவு - திரண்டனவும் ஆன,கொங்கை-முலைகளையும் உடைய, மிகாபதி-மிகாபதி என்பவள், மிக்க தேவி-முதல் மனைவி. தாங்க அரும்-பிறரால் ஏற்பதற்கரிய,கற்பின்-கற்போடுகூடிய, தங்கை-இளையமனைவி, சசிஎன்பாள் - சசி என்பவள். (அவள்)சசியொடு ஒப்பாள் - இந்திரனது தேவியாகிய சசிக்கு நிகரானவள்.

'தீங்கரும் பமிழ்த மூட்டித் தேனளாய்ப் பிழிந்த போலும் இன்சொல், வேந்தணங்குறக்குங்கொங்கை' எனவும் கூட்டிக் கொள்ளலாம். அப்பொழுது, "வேந்தனுக்கு அச்சம் உண்டாகும்படி கோபிக்கும் முலை' என்பது பொருள். அணங்கு - அச்சம். உறுத்தல் - கோபித்தல். மாதர்முலை காதலரைக் கோபிக்குமென்பதை "வேளைவென்ற முகத்தியர் வெம்முலை, ஆளை நின்று முனிந்திடு மங்கொர்பால்'' என்ற கம்பர் உரையாலும், பின்னும், "உத்தராசங்கமிட் டொளிக்குங்கூற்றமே,'' என்று அவர் மாதர்முலையை அழைப்பதாலும் தெரிந்துகொள்ளலாம்.

---

63. பூங்குழை மகளிர்க் கெல்லாம்
பொன்மலர் மணிக்கொம் பன்ன
தேங்குழன் மங்கை மார்க
டிலதமாய்த் திகழ நின்றார்
மாங்கொழுந் தசோக மென்றாங்
கிரண்டுமே வயந்த காலத்
தாங்கெழுந் தவற்றை யெல்லா
மணிபெற வலரு மன்றே. 29.

பொன்மலர் - பொன்மலர்களைப் பூத்துள்ள, மணி கொம்பு அன்ன - இரத்தினக் கொடி போன்றவரும், தேம் குழல் - நறுமணங்கமழும் கூந்தலை உடையவரும் (ஆகிய இவ்விரு) மங்கைமார்கள் - மாதரும், பூ குழை மகளிர்க்கு எல்லாம் - அழகிய காதணியணிந்த மாதர்களுக்கு எல்லாம், திலதமாய் - திலகம் போல், திகழநின்றார் - விளங்கித் தோன்றினர். (இவ்வாறு, இவ்விருவராலேயே மற்ற மாதர்க்கெல்லாம் சிறப்புண்டாயிற்றென்பதற்கு ஒரு உவமை எடுத்துக் காட்ட வேண்டுமாயின்) வயந்த காலத்து - வசந்தகாலத்தில், ஆங்கு எழுந்தவற்றை எல்லாம் - தளிருடன் எழுந்துநின்ற மற்ற மரங்கள் எல்லாம், அணிபெற- (தம்மோடு சேர்ந்து) அழகு பெறுமாறு, மாங்கொழுந்து அசோகம் - மாவின் கொழுந்து அசோகின் மலர் என்று, ஆங்கு இரண்டுமே-என்ற இரண்டுமே, அலரும் அன்றே - மலரும் அன்றோ.

ஆங்கு இரண்டும் இசையசை. எழுந்தவற்றை - இரண்டாம் வேற்றுமையன்று; எழுந்தவை எல்லாம், எனக்கொள்க. அன்றே—தேற்றம். இச்செய்யுள், எடுத்துக்காட்டுவமையணி.

யாப்பிலக்கணம்

அசை

[88-வது பக்கத் தொடர்ச்சி]

செய்யுள்களில் சீர்கள் அமைகின்ற தன்மையை ஒரு சிறிதேனும் உணர்ந்தபின் அசைகளின் வகைகளை அறிய முயல்வது நன்றெனக் கருதிப் பெரும்பான்மை ஓசையும் பொருளையும் ஒட்டியே உயர்தரச் செய்யுள்களில் சீர்கள் நடக்குமென்பதைச் சென்றவாரம் சிற்சில உதாரணங்களால் காட்டினோம். இன்று இன்னொரு செய்யுள் எடுத்து நோக்குவோம்:-

கற்பகத்தின்பூங்கொம்போகாமன்தன்பெருவாழ்வோ
பொற்புடையபுண்ணியத்தின்புண்ணியமோபுயல்சுமந்
விற்குவளைபவளமலர்மதிபூத்தவிரைக்கொடியோ [து
அற்புதமோசிவனருளோவறியேனென்றதிசயித்தார்

பரவையாரைக் கண்ணுற்ற ஆளுடையநம்பி அதிசயித்து வியந்த நயந்தனைக் கூறும் சேக்கிழார் செய்யுள் இது. இந்தப் பாசுரத்தை ஓசையின் உதவி கொண்டே சீர்பிரித்துவிடலாம். காதைச் செலுத்தி ஓசையின்பத்திற் கிணங்கியபடியே சீர்களை நிறுத்திக் கொண்டவுடன் பொருளும் எளிதில் விளங்கக் காண்பீர்:—

கற்பகத்தின் பூங்கொம்போ
காமன்தன் பெருவாழ்வோ
பொற்புடைய புண்ணியத்தின்
புண்ணியமோ புயல்சுமந்து
விற்குவளை பவளமலர்
மதிபூத்த விரைக்கொடியோ
அற்புதமோ சிவனருளோ
வறியேனென் றதிசயித்தார்.

பொருள் நிறைந்த சொல்லோடு ஒவ்வொரு சீரும் முடிகின்ற அழகுடையது இப்பாட்டு. இதனை வேறு எவ்வகையில் சீர்பிரித்தாலும் பொருள்போய் ஓசைச்சுவையும் போய்க் கெடுகின்றவிதம் புலப்படும். இனி, வில்லிபுத்தூரர் திருமாலைப் பரவுகின்ற வொரு செய்யுளையும் பயின்று அதன்கண் உள்ள சீர்களின் அசைகளைக் கற்கப் புகுவோம்:—

கோயிலாளுடையபைங்கொண்டலார்கண்டுயில்
பாயலாய்வாழபோக்கியஞ்செய்ததென்
தீயலாதுவமைவேறில்லெனத்தீயநின்
வாயெலாநஞ்சுகால்வாளெயிற்றுரகமே.

[தாமரையைக் கோயிலாகவுடைய (அல்லது எனது இதயத்தைக் கோயிலாகக் கொண்டுள்ள) திருமகளை உடைய பசுமையான மேகம்போன்ற திருமால் கண்துயில் வதற்குரிய பாயலாய் வாழ, நெருப்பல்லாது வேறு உவமையில்லாதபடி கொடிய நின் (ஆயிரம்) வாய்களிலும் விஷத்தைக் கக்குகின்ற கூரிய பற்களையுடைய பாம்பே, நீ செய்த பாக்கியந்தான் என்ன]

ஓசையும் பொருளும் உடன்இயங்கப் பாடினால் இப்பாசுரம் தானாகவே இவ்வண்ணம் சீர்பிரியும்:—

கோயிலா ளுடையபைங் கொண்டலார் கண்டுயில்
பாயலாய் வாழநீ பாக்கியஞ் செய்ததென்
தீயலா துவமைவே றில்லெனத் தீயநின்
வாயெலா நஞ்சுகால் வாளெயிற் றரகமே

இச்செய்யுளின் ஒவ்வொரு அடியிலும் நான்கு சீர்கள் இருக்கின்றன. ஒவ்வொரு சீரிலும் இரண்டு அசைகள் இருக்கின்றன. முதலடியில்,

கோயிலா—என்பது முதல்சீர். அதனில் கோ என்பது ஒரு அசை; யிலா என்பது ஒரு அசை.

ளுடையபைங்—என்பது இரண்டாவது சீர். அதனில் ளுடை என்பது ஒரு அசை; யபைங் என்பது ஒரு அசை.

கொண்டலார்—என்பது மூன்றாவது சீர். அதனில் கோண் என்பது ஒரு அசை; டலார் என்பது ஒரு அசை.

கண்டுயில்—என்பது நான்காவது சீர். அதனில் கண் ஒரு அசை; டுயில் ஒரு அசை.

இப்படியே இரண்டாவது அடியிலும்,

பாயலாய்—என்பது முதல் சீர். பா ஒரு அசை; யலாய் ஒரு அசை.

வாழநீ—என்பது இரண்டாவது சீர். வா ஒரு அசை; ழநீ ஒரு அசை.

பாக்கியம்—என்பது மூன்றாவது சீர். பாக் ஒரு அசை; கியம் ஒரு அசை.

செய்ததென்—என்பது நான்காவது சீர். செய் ஒரு அசை; ததென் ஒரு அசை.

இவ்வண்ணமே மற்றச்சீர்களிலும்,—தீ-யலா, துவமைவே, றில் - லெனத், தீ - யநின், வா - யெலா, நஞ்சுகால், வா - ளெயிற், றர - கமே—என அசைகள் அமைந்திருக்கின்றன.

இனி, எழுத்துக்கள் எந்த நியதிபற்றி அசைகளாக அமைகின்றன என்பதைக் கற்போம். பொதுவாகக் கூறுமிடத்து மாத்திரையைத் தொடர்ந்து எழுத்துக்கள் அசைகளாகும் என்னலாம்.

(1) மெய்யெழுத்து ஒருபோதும் சீரின் முதலில் வராது.

(2) சீரின் முதலில் ஒருமாத்திரைக்கு மேற்பட்ட எழுத்து ஒன்றுநின்றால் உடனே அந்த ஒரு எழுத்தையே ஒரு அசையாகக்கொண்டு விடுங்கள்:—

ஆகையால், இரண்டு மாத்திரையுடைய நெடில்களும், மொழிக்கு முதலாக நின்று ஒன்றரை மாத்திரை பெறுகின்ற ஐகார ஔகாரங்களும் சீரில் முதலில் நிற்கும்போது அசைகள் ஆகிவிடும். எனவே, கோயிலா, என்னும் சீரின் முதல்நின்ற நெடிலாகிய கோ என்பதை ஒரு அசையாகக் கொண்டோம். அப்படியே, பாயலாய் என்னும் சீரில் முதல்நின்ற பா என்பது ஒரு அசை ஆயிற்று. அடுத்த வாழநீ என்னும் சீரின் முதலில் உள்ள வா என்னும் நெடில் ஒரு அசையாயிற்று; அச்சீரிலேயே உள்ள நீ என்பதும் நெடிலாயினும் அதனை ஒரு அசையாகக் கொள்ளப்படாது. ஏனெனில் அது சீரிற்கு முதலில் இல்லையே. கடைசியில் அன்றோ இருக்கின்றது. சீரின் முதலில் நிற்கின்ற நெடிலைத் தனியாக எடுத்து ஒரு அசையாகக் கொள்ளலாம் என்பதைத்தான் இதுவரையில் எடுத்துக்கூறியிருக்கிறோம். என்பதைமறக்கலாகாது. எனவே, தீயலா, தீயநின், வாயெலா, வாளெயிற், என்ற சீர்களின் முதலில் உள்ள தீ-தீ-வா-வா நெடில்கள் தனியாய்ப் பிரிந்து அசைகளாகும். மற்று, கோயிலா, கொண்டலார், பாயலாய், வாழநீ, தீயலா, துவமைவே, வாயெலா, நஞ்சுகால், றரகமே, என்ற சீர்களில் உள்ள, லா-நீ-ஙீ-லா-வே-லா-கா-மே, என்ற நெடில்கள் சீரிற்கு முதலில் இல்லாமையால் அவை இங்குத் தாமே தனிநின்று அசைகள் ஆகவில்லை.(ஐகார ஔகாரங்கள் சீரின் முதலில் நின்று அசைகள் ஆவதற்கு உதாரணம் இச்செய்யுளில் இல்லை. வேறொரு செய்யுளில் பிறகு காட்டுவோம்).

(3) அப்படி முதலில்நிற்கின்ற நெடிலிற்குப் பக்கத்தில் ஒன்று அல்லது இரண்டு மெய்யெழுத்துக்கள் வந்தாலும் அம்மெய்யெழுத்துக்களையும் அந் நெடிலோடு சேர்த்து ஒரு அசை என்று கொள்ள வேண்டும். பாக்கியம், என்ற சீரில், பா என்ற நெடிலிற்குப் பின் க் என்ற மெய்மெழுத்து வந்திருக்கின்றது. ஆகையால் பாக் என்பதை ஒரு அசையாகக் கொள்ளவேண்டும். நெடிலைத் தொடர்ந்து இரண்டு மெய்யெழுத்துக்கள் வந்த அசைக்கு உதாரணம் இந்தச் செய்யுளில் இல்லை. ஆயினும், வாழ்ந்தான், நேர்ந்தது, பாய்ச்சல் போன்ற சீர்களில் முதல்நின்ற நெடிலோடு இரண்டு மெய்யெழுத்துக்கள் சேர்ந்துவர, அவைகளையும் சேர்த்து, வாழ்ந், நேர்ந், பாய்ச் என்று அசைளாகக் கொள்ளுங்கள்.

(4) சீரிற்கு முதலில் ஒரு குற்றெழுத்தும் அதன் பக்கத்தில் ஒன்று அல்லது இரண்டு மெய்களும் தொடர்ந்திருந்தால், அக்குற்றெழுத்தோடு மெய்யெழுத்துக்களையும் சேர்த்து ஒரு அசையாகக் கொள்ள வேண்டும்.

கொண்டலார், என்னும் சீரில், முதல் நின்ற கோ என்னுங் குற்றெழுத்தோடு அதன்பக்கத்தில் இருக்கும் ண் என்னும் மெய்யெழுத்தையும் ஒன்றாகச் சேர்த்துக் கோண் என்ற ஒரு அசையாகக் கொள்க. அவ்வாறே, கண்டுயில் என்னுஞ் சீரில் கண் என்பது அசை ஆகும். செய்ததென், என்னுஞ் சீரில் செய் என்பதும்; றில்லென, என்னுஞ் சீரில் றில் என்பதும்; நஞ்சுகால் என்னும் சீரில், நஞ் என்பதும் அசைகள் ஆகின்றன. தனிக்குறிலை அடுத்து இரண்டு மெய்யெழுத்துக்கள் வருவதற்கு உதாரணம் இந்தச் செய்யுளில் இல்லை. எனினும், 'உய்ந்து' என்பது போன்ற சீர்களில் முதல்நின்ற தனிக்குறிலைத் தொடர்ந்து இரண்டு மெய்யெழுத்துக்கள் வருவதைக் காணலாம். அப்பொழுது உய்ந் என்பது ஓர் அசை ஆகும்.

(6) சீரிற்கு முதலில் குறிலிருக்க அதற்குப்பின் வேறு குறிலேனும் நெடிலேனும் தொடருமாயின் அவ்வாறு தொடர்கின்ற எழுத்தையும் முதல் நின்ற குறிலோடு சேர்த்து ஒரு அசையாகக் கொள்ளுங்கள்.

ளுடையபைங் என்னுஞ் சீரில் ளு என்னும் முதற் குறிலிற்குப்பின், டை என்னும் எழுத்தும் சேர்ந்து வருவதால் அவையிரண்டையும் சேர்த்து, ளுடை என்பதை ஒரு அசையாகக் கொள்ளுங்கள். ளு என்பதை மாத்திரம் ஒரு அசையாகக் கொள்ளலாகாது. ஏனெனில் அது குறில். சீரிற்கு முதலில் நிற்பது நெடிலானால்தான் அவ்வொரு வெழுத்தை மாத்திரம் தனி அசையாகக் கொள்ளலாம் என்று சற்று முன் கூறியதை மறக்காதீர். சீரிற்கு முதலில் இருப்பது குற்றெழுத்தென்றால் அதன்பின் வருகிற மெய்யெழுத்து ஒன்றாயின் அவ்வொரு மெய்யெழுத்தையும், அல்லது மெய்யெழுத்து இரண்டாயின் அவ்விரு மெய்யெழுத்துக்களையும், உடன் சேர்த்துக்கொண்டு ஒரு அசை ஆக்குதல் வேண்டும். ஆனால், சீரின் முதலில் நிற்கின்ற குற்றெழுத்தைத் தொடர்ந்து வருவது மெய்யெழுத்தல்லாமல் வேறு எழுத்துக்களாகுமாயின், அவ்வெழுத்துக்களில் இக்குறிலிற்கு அடுத்து நிற்கின்ற ஒரு எழுத்தை மாத்திரம் (அது குறிலாயினும் நெடிலாயினும்) கூடச் சேர்த்துக்கொண்டு அசையாகக் கொள்ளவேண்டும். தன்னந்தனியாய் நிற்கின்ற ஒரு குறில் ஒரு பொழுதும் சீரின் முதலில் அசை ஆகாது. ஆகையால் ளுடை என்னும் இரண்டெழுத்தையும் ஒன்றாகச்சேர்த்து ஒரு அசையாகக் கொள்க. அப்படியே, துவமைவே, என்னுஞ் சீரிலும், துவ என்னும் இரண்டு குறில்களும் சேர்ந்துதான் சீரிற்கு முதலில் ஒரு அசை ஆகும். றரகமே, என்னும் சீரிலும் றர என்னும் இரண்டு எழுத்துக்களும் சேர்ந்து ஒரு அசை ஆகும்.

குறிலும் அக்குறிலை அடுத்து நெடிலுமாய்ச் சீரிற்கு முதலில் இச் செய்யுளில் நிற்கவில்லை. ஆயினும், அவாவினேன், பொலாதவன், போன்ற சீர்கள் வருமாயின், அவா, போலா என்பவைகளை அசைகளாகக் கொள்ளுங்கள்.

'அவாவினேன்', றரகமே போன்ற சீர்களில் முதல் நின்ற குறிலோடு அதற்கு அடுத்த எழுத்து ஒன்றை மாத்திரந்தான் சேர்த்து அசை ஆக்க வேண்டும் (பின் வருவது மெய்யெழுத்துக்களாயிருந்தாற்றான் ஒன்று அல்லது இரண்டையும் சேர்த்துக் கொள்ளலாம்) ஆகையால் அவா அல்லது றர என்ன இரண்டு எழுத்துக்கள்தான் முதல்அசை ஆகும்பொருட்டுச் சேரும். அவாவி, றரக, என்று இன்னொரு எழுத்தையும் சேர்த்துக்கொள்ளப்படாது.

(7) மேலே சொன்னபடி இரண்டு குறிலேனும், அல்லது முதலிற் குறிலும் பிறகு நெடிலுமாக வேனுஞ், சேர்ந்தவுடன் அதற்கடுத்தாற்போல் மெய்யெழுத்து ஒன்றேனும் இரண்டேனும் தொடருமாயின், அம்மெய்யெழுத்துக்களையும் கூடச் சேர்த்துக் கொண்டு அவையனைத்தும் ஒரு அசை என்று கொள்ள வேண்டும்.

அப்படிச் சேர்ந்து சீரின் முதலசையாய் நிற்பதற்கு உதாரணம் இந்தச் செய்யுளில் இல்லை. ஆகையால் வேறு உதாரணங்கள் பார்ப்போம்:—

சிரித்தான்—என்பது சீராயின், சி என்னும் முதலெழுத்துக் குறிலாதலால் அதன் பக்கத்தில் வரும் ரி என்னும் எழுத்தையும் (குறில்) அதனோடு சேர்த்துக் கொள்ள வேண்டும். சிரி என்பதன்பின் த் என்னும் மெய்யெழுத்து வருகின்றது ஆகையால் அதையும் சேர்த்துக்கொண்டு சிரித் என்பது இச்சீரின் முதலசை என்ன வேண்டும்.

பெயர்ந்தான்—என்பது சீராயின், பெயர்ந் என்பது முதலசை ஆகும்.

விடாப்பிடி—என்பது சீராயின், வி என்னும் குறிலும் அதன் பின் வரும் டா என்னும் நெடிலும் அதன்பின் வரும் ப் என்னும் மெய்யும் ஒன்றாகச் சேர்ந்து விடாப் என முதல் அசை ஆகும்.

உராய்ந்து—என்பது சீராயின், உ என்னும் குறிலும் அதனை அடுத்துவரும் ரா என்னும் நெடிலும், அதனை அடுத்துவரும் ய் என்னும் மெய்யும் அதனை அடுத்துவரும் ந் என்னும் மெய்யும் எல்லாம் ஒன்றாய்ச் சேர்ந்து உராய்ந் என்பது முதல் அசை ஆகும். அதற்குமப்புறம் இருக்கிற து என்னும் எழுத்தோடு சேராது.

குறிப்பு:—சீரிற்கு முதலில் குற்றெழுத்து நின்றால்தான் அதன்பின் வருகிற மெய்யெழுத்தோடாகிலும் உயிர்மெய்யெழுத்தோடாகிலும் சேர்ந்து அசை ஆகும். மற்று, சீரிற்கு முதலில் நிற்பது நெடிலானால், அதற்குப் பின் வருகிற மெய்யெழுத்தோடு மாத்திரம் சேருமே ஒழிய, உயிர்மெய் யெழுத்தோடு ஒருபோதும் சேராது. பாக்கிய — என்ற சீரில், பா என்னும் நெடிலிற்குப்பின் க் என்னும் மெய்யெழுத்து வந்திருப்பதால் அதனோடு சேர்ந்து பாக் எனமுதல் அசை ஆயிற்று. ஆனால் கோயிலா—என்ற சீரில், கோ என்ற நெடிலிற்குப் பின் வந்திருப்பது யி என்னும் உயிர்மெய்யாதலால் அதனோடு சேராமல், கோ என்பது மாத்திரம் தனியாக ஒரு அசையாய் நின்றுவிடும். அப்படியே, தீயலா, வாளெயிற், என்ற சீர்களிலும் தீ, வா, என்பனவே முதல் அசைகள்.

இவ்விதிகளை மனதில் வைத்து, சீரின் முதல் அசையைத் தப்பாமல் பிரிக்கப் பயின்றுவிட்டால் அச்சீரிலுள்ள மற்ற அசைகளைப் பிரித்துத் தெரிந்து கொள்ளல் மிக்க சுலபமாகிவிடும். இனி அசைகளின் பேர்களைக் கற்கலாம். அசைகள் இரண்டு விதப்படும்.

I ஒரு குறிலாயினும் ஒரு நெடிலாயினும் தனித்தாகிலும் அல்லது மெய்யெழுத்து ஒன்றுடனேனும் இரண்டுடனேனும் சேர்ந்தாகிலும் ஒரு அசை ஆகுங்கால் அந்த அசைக்கு நேர் அசை என்றுபெயர் —கோ, கொண், கண், பா, வா, பாக், செய், தீ, றில், தீ, வா, நஞ், வா, என்னும் இவைகள் இச்செய்யுளிலுள்ள சீர்களின் முதலில் நிற்கின்ற நேரசைகள். இரண்டு மெய்கள் தொடர்ந்துவரப்பெற்ற தனிக்குறில் அல்லது தனிநெடிலும் நேரசைகளே—உய்ந், போழ்ந் போன்றன.

II இரண்டு குறில்கள், அல்லது முதலிற் குறிலும் பிறகு நெடிலும், சேர்ந்து நிற்க அவைகளுக்குப்பின் மெய்யெழுத்தும் கூடவந்து சேர்ந்தேனும் சேராமலேனும் ஒரு அசை ஆகும்போது, அந்த அசைக்கு நிரைஅசை என்பது பெயர்:—ளுடை, துவ, றர, அவா, பொலா, சிரித், பெயர்ந், விடாத், உராய்ந், என்று முன்னர்க் காட்டிய அசைகள், நிரையசைகள்.

குறிப்பு:—நிரையசை எப்பொழுதும் முதலில் குற்றெழுத்தை உடையதாக இருக்கும். இரண்டாவது எழுத்துக் குறிலாக வேனும் நெடிலாகவேனும் இருக்கலாம். ஆகையால், பட, என்பதும் நிரையசைதான்; படம் என்பதும் நிரையசைதான்; படா என்பதும் நிரையசைதான், படாம் என்பதும் நிரையசைதான். ஆனால் பாட, பாடம், என்பன போன்றன நிரையசைகளாகா. முதலில் வந்த பா என்னும் நெடில் மாத்திரம் ஒரு நேரசையும், அதன்பின் வருகிற ட, அல்லது டம் என்பது வேறு ஓர் நேரசையும் ஆகும்.

மானத சாத்திரம்

[PSYCHOLOGY]

[86-வது பக்கத் தொடர்ச்சி]

(புலன்கள் - Perception)

கண்.

கட்புலனைப்பற்றி இதுவரை 15 உண்மைகளை ஆராய்ந்தோம்.

1. நிறங்களின் இயைபு:—காயா (Violet), அவரி (Indigo), கருமை (Black), ஊதா (Blue), பசுமை (Green), மஞ்சள் (Yellow), கிச்சிலி (Orange), செம்மை (Red), என்ற ஏழு நிறமும் தொடர்ந்து விளங்கும் ஒளிவில்லின் இருமுனையும் செச்சைநிறமாகி ஒத்திருப்பதனைக் கண்டோம். (ஒளிவிற் கடையொப்பு)

2. செச்சை நிறம் (Purple) ஒளிவில்லில் உள்ள ஏழு நிறங்களில் ஒன்றல்லதாயினும், அஃதும் ஒரு காட்சிப்புலனே யாகும். (செச்சைநிறப் புலன்)

3. ஒளிவில்லில், ஒன்றை அடுத்துள்ள இரண்டு நிறங்களைக் கலந்தால் இடையிலுள்ள நிறம் தோன்றுகிறது. எடுத்துக்காட்டாக, செம்மையையும் மஞ்சளையும் கலந்தால் இடையில் உள்ள கிச்சிலிநிறம் தோன்றுகின்றது. இவ்வாறே மற்றவையையும் கண்டுகொள்க. (நிறக்கலப்பால் இடைநிறத் தோற்றம்)

4. செம்மை பசுமை கருமை (நீலம்-Blue) என்ற மூன்று முதனிலை நிறங்களே உள்ளன; அவற்றின் கலப்பாலேயே மற்றைய நிறங்கள் அனைத்தும் தோன்றுகின்றன. (முதனிலை நிறம் மூன்று)

5. ஒன்றினோடொன்று இயையாது இனம் பிரிந்து வெவ்வேறாக விளங்கும் தனிநிலை நிறங்களோ, செம்மை பசுமை கருமை மஞ்சள் என நான்காக உள்ளன. (தனிநிலை நிறம் நான்கு)

நிறங்களோடு வெளிறுகளுக்குள்ள பொது இயைபு.

6. துணைநிறங்கள் கலந்தபோது வெளிறு தோன்றுகின்றது (துணைநிறக் கலப்பால் வெளிற்றின் தோற்றம்).

7. ஒளிவில்லில் காணப்படும் எல்லா நிறங்களையும் ஒன்றாகக் கலந்தபோதும் வெளிறே தோன்றுகிறது (ஒளிவில் நிறக்கலப்பால் வெளிற்றின் தோற்றம்)

நிறங்களோடு வெளிறுகளுக்குள்ள சிறப்பியைபு.

8. நிறங்கள் மங்கலாக உரங்குன்றி விளங்கும்போது அவை வெளிறாகவே தோன்றுகின்றன; நிறமாகத் தோன்றுவதில்லை. (உரமில் நிறத்தின் வெளிற்றுத் தோற்றம்)

9. நிறத்தூண்டலானது நமது கட்புலப்படாத்தின் (Retina) ஒரு சிறு இடத்தைமட்டும் தாக்குமானால், வெளிறே தோன்றுகின்றது; நிறம் தோன்றுவதில்லை. (ஒருசிறை தாக்கும் நிறத்தின் வெளிற்றுத் தோற்றம்.)

10. நிறமானது நமது கண்புலப்படாத்தின் விளிம்பில் விழுமானால், வெளிறே தோன்றுகின்றது; நிறம் தோன்றுவதில்லை (விளிம்புவீழ் நிறத்தின் வெளிற்றுத் தோற்றம்.)

11. நிறக் குருடர்களுக்குச் சில நிறங்கள் வெளிறாகவே தோன்றுகின்றன. (நிறக்குருடரது வெளிற்றுத் தோற்றம்.)

நிறங்கள் வெளிறுகள் இவற்றின் துணைநிலை இயைபு:-

12. களைப்பு மிகுதியினால், ஒரு நிறத்தின் பின்னிலைப்புலன், அதனது துணைநிறமாகத் தோன்றுகின்றது. கருமை (நீலம்) மஞ்சளாகப் புலனாகின்றது. கறுப்பு வெண்மையாகப் புலனாகின்றது (துணைநிறப் பின்னிலைப் புலன்)

13. சில இடத்தில் துணைநிறங்கள் ஒரேபோதில் அடுத்தடுத்துத் தோன்றுகின்றன. (உடனிலை முரண்நிறம்)

பொது இயைபுகள்.

14 நமது கட்புலப்படாத்தின் ஓரிடம் தூண்டப்படாது இருந்தபோது அங்குக் கறுப்புப் புலனாகிறது. (கறுப்புத் தோற்றம்)

15. விளக்க நிலையின் வேறுபாட்டால் நிறங்களின் பளபளப்பு மாறுபடுகின்றது (பற்கிஞ்சித் தோற்றம்).

இவ்வேறுபாடுகள் அனைத்தும் எவ்வாறு எழுகின்றன? கட்புலத் தோற்றமுறைதான் யாது? இதனை இதுவரையில் ஐயந்திரிபற விளக்கினவர்கள் இல்லை. ஒன்றை விளக்கினால் ஒன்று முரண்படுகிறது.

மூன்றுநிறக் கோள்கை :— செம்மை, பசுமை, கருமை (நீலம்) என்ற நிறங்களே முதனிலை நிறங்களாம். இவற்றினைத் தோற்றுவிக்கும் மூன்று வேறு பொருள்கள் நமது கண்களி லுள்ளனவாம். செந்நரப்பம், கரு நரப்பம், பசு நரப்பம் என்று அவை நரம்பாக நம்கண்களின் குமிழ்களில் உள்ளனவாம். அவ்வந்நிறங்கள் அவ்வந்நரப்பத்தைத் தாக்கியபோது, அவ்வந்நிறப் புலன் உண்டாகின்றதாம். இவற்றில் இரண்டு வேறு நரப்பங்கள் தாக்கப்பட்டால், காயா கிச்சிலி முதலியவாய் இடைநின்ற பிற நிறங்கள் தோன்றுகின்றனவாம். மூன்று நிறப்பொருள்களும் தாக்குண்டால், வெண்மை தோன்றுகின்றதாம். நாள் செல்லச்செல்ல இக்கொள்கை வானகக் கோட்டையாக முடிந்தது. ஏன்? செம்பொருள், கரும்பொருள், பசும்பொருள் என்று மூன்று வேறு பொருள்களை, எவ்வளவோ ஆராய்ந்து பார்த்தும், கண்ணினுள் ஆராய்ச்சிவாணர் காணக்கூடவில்லை. ஆகவே, மூன்று வேறு பொருள்களால் இந்நிறங்கள் எழுகின்றன என்பதை விட்டொழித்து, மூன்று வேறுவகையான இயக்கங்களால் இந்நிறத்தோற்றங்கள் உண்டாகின்றன என வேறொரு சாரார் கூறுவாராயினர். ஒளிவிற் கடையொப்பு, செச்சைநிறப் புலத்தோற்றம், நிறக்கலப்பில் இடைநிறத் தோற்றம், முதனிலை நிறம் மூன்றி னிருப்பு, என்ற முதல்நான்கு உண்மைகளை இக்கொள்கை செவ்வனே விளக்கிவைக்கின்றது. ஒளிவில் நிறக்கலப்பால் வெளிற்றின் தோற்றம் (7-வது உண்மை) உண்டாவது கண்டே இக்கொள்கை எழுந்தது என்னலாம். துணைநிறக் கலப்பால் வெளிறு தோன்றுவதனையும் (6-வதுஉண்மை) இக்கொள்கை ஒருவாறு விளக்குகின்றது. விளிம்புவீழ் நிறத்தின் வெளிற்றுத் தோற்றத்தை(10-வது உண்மை)விளக்கவந்து, விளிம்பிலே நிறத்தைத் தோற்றுவிக்கும் குமிழ்கள் இல்லை என்று முடிவுகட்டினர். நிறக்குருடர்களது கண்ணில்

நிறஇயக்கத்திற்கேற்ற உறுப்புக்கள் கெட்டும் குறைந்தும் கிடக்கின்றனவாதலின், அவர்களுக்குச் சில நிறங்கள் வெளிறாகத் தோன்றுகின்றன என்றனர் (11-வது உண்மை). வேறொரு இயக்க அமைப்பானது களைத்தபோது மற்றொரு இயக்க அமைப்பினால் துணைநிறம் தோன்றுகின்றதாம் (12-வது உண்மை). 15-வது உண்மை இவ்வியக்கங்களின் அளவு மாறுபாட்டைக் காண்பிக்கின்றதாம்.

ஆனால் இக்கொள்கை தனிநிலை நிறங்கள் நான்கென நிற்பதை எவ்வாறு விளக்கக்கூடும். மஞ்சளும் தனிநிறமாக வன்றோ காணப்படுகின்றது. அதனை மற்றைய மூன்றில், எதனது இனமெனச் சேர்த்தல் கூடும். உரமில் நிறத்தின் வெளிற்றுத் தோற்றமும், (8வது உண்மை) ஒருசிறை தாக்கும் நிறத்தின் வெளிற்றுத் தோற்றமும் (9வது உண்மை) இக்கொள்கைப்படி ஏன் உண்டாகின்றன? ஒரு சிறு இடத்தில் விழுந்த நிறம் நன்றாக அன்றோ நிறம்பெற்று விளங்குதல் வேண்டும். 13 வது உண்மைப்படி எதிர்நிலை முரண் நிறம் எழுவது எங்ஙனம்? இவை எல்லாம் கண்ணில் எழும் இயக்கங்களால் தோன்றுவன அல்ல; மூளையில் எழும் இயக்கங்களால் தோன்றுவன என்று இக்கொள்கையினர் கூறிப் போகின்றனர்.

உடலியக்கக் கோள்கைகள்:— இக் குறைபாடுகளை நீக்கவேண்டி ஹேரிங் என்பவர் உடலியக்கக் கொள்கையை வெளிப்படுத்தினார். நம் உடலின் இயக்கங்கள் இரண்டு வகையாக நிகழ்கின்றன. ஒன்று ஆக்க இயக்கம். நாம் உண்ணும் உணவைக் குருதிவழியாக உடல்முழுதும் பரப்பி உடலை வளர்க்கும் இயக்கங்கள் ஆக்க இயக்கங்களாகும். நாம் வேலை செய்யும் தோறும், குருதி வழியாக வந்த ஆற்றல் குறைபடுகிறது. வேலைவடிவாம் இவை எல்லாம் அழிவியக்கங்களாகும். ஆக்க இயக்கம் (anabolism) அழிவியக்கம் (Katabolism) என்பன எதிர்நிலை இயக்கங்கள். ஒவ்வோர் ஆக்க இயக்கத்திற்கும் நேர் எதிரிடையான அழிவியக்க முண்டு. இவ்விரண்டும் சேர்ந்து ஓர் எதிர்நிலை இயக்க முறையாகின்றன. இவ்விரண்டாக நிற்கும் எதிர்நிலை இயக்க முறைகள் மூன்று நமது கட்புலப்படாத்தில் நிகழ்கின்றனவாம். முதல் இணையில், ஆக்க இயக்கத்தால் பசுமையும், அழிவியக்கத்தால் செம்மையும் புலனாகின்றனவாம். இரண்டாவது இணையில் ஆக்க இயக்கத்தால் கருமையும் (நீலம்) அழிவியக்கத்தால் மஞ்சளும் புலனாகின்றனவாம். மூன்றாவது இணையில் ஆக்க இயக்கத்தால் கறுப்பும் அழிவியக்கத்தால் வெளுப்பும் புலனாகின்றனவாம். கருமையும், பசுமையும் கறுப்பும் கண்குளிரக் காணக்கூடியனவாய் ஓரினமாதலையும், செம்மை மஞ்சள் வெண்மை என்பவை கண்ணைக் கூசச்செய்வனவாய் வேறோரின மாதலையும் காண்க.

இக்கொள்கையானது மேல் நாம் குறித்த 5, 6, 13, 14வது உண்மைகளை அடிப்படையாகக் கொண்டு எழுந்தது. தனிநிலை நிறங்கள் நான்கிருத்தலையும் கறுப்புப் புலத்தோற்றத்தையும் (15வது உண்மை) இக்கொள்கை விளக்குகின்றது. ஒளிவிற்கடையொப்பு செச்சைப்புலன் இடைநிறத் தோற்றம் என்ற முதன் மூன்று உண்மைகளும் இக்கொள்கைவழியே தெளிவாகின்றன. நிறக்கலப்பி னுண்மையையும் (6-வது 7-வது உண்மைகள்) களைப்பால் துணைநிறம் தோன்றுவதனையும் மூன்றுநிறக் கொள்கைபோல இக்கொள்கையும் விளக்கிவைக்கின்றது. ஒருசிறை நிறமும் உரமில்நிறமும் வெளிறாய்த் தோன்றுவது இக்கொள்கைப்படி விளங்குவது அருமையல்ல. வெளுப்பும் கறுப்பும் தனியே எழுகின்றன அன்றோ? விளிம்பில் வெளிற்றுத் தோற்றம் (10 உண்மை) உண்டாவது ஏன்? கருமை மஞ்சள் இயக்கமுறையும் பசுமை செம்மை இயக்கமுறையும் விளிம்பில் நிகழ்வதில்லையாதலின் வெளிறே தோன்றுகின்றதாம். நிறக்குருடர், (11-வது உண்மை) கண்ணில் இவ்வியக்கமுறைகளில் ஒன்றோ இரண்டோ குறைபடுகின்றனவாம். கருமை மஞ்சள் இயக்கமுறைக்கும், பசுமை செம்மை, இயக்க முறைக்கும் அளவு மாறுபாடு உண்மையில் பற்கிஞ்சித்தோற்றம் (15-வது உண்மை) நிகழ்கின்றதாம். உடனிலை முரண்நிறத் தோற்றமும் இக்கொள்கைப்படி வெளிச்சமாகின்றது. நமது கட்புலப்படாத்தில் குறித்த இடத்தில் நிறத்தோற்ற இயக்கம் நிகழும்போது, சுற்றியுள்ள இடத்திலிருந்தும் வேண்டிய மருந்துப்பொருளை அவ்வியக்கம் இழுத்துக் கொள்கிறதாம். அதனால், சுற்றியுள்ள இடங்களில் எதிர்நிலைத் தோற்றம் உண்டாகின்றதாம்.

ஆனால் இக்கொள்கையும் குறையுடையதே யாகும். தனிநிலைநிறங்கள் நான்கானால் மூன்றிலிருந்தே எல்லா நிறங்களும் தோன்றுவது ஏன்? கருமை பசுமை கறுப்பு என்பன ஆக்க இயக்கத்தால் எழுகின்றன என்றன்றோ இக்கொள்கை கூறுகின்றது. ஆனால் மற்றைய புலப்பொறிகளில் எல்லாம் இயக்கமனைத்தும் அழிவியக்கமாகவன்றோ நரம்புக் கிளர்ச்சிகள் எழுகின்றன. இங்குமட்டும் ஆக்க வியக்க வழியாக நரம்புக்கிளர்ச்சிகள் எழுவது எங்ஙனம். மஞ்சள் கருமை என்ற இணையிலும், பசுமை செம்மை என்ற இணையிலும் எதிர்நிலைநிறங்கள் ஒன்றை ஒன்று அழித்துவிடுதலால் வெளிறு தோன்றுகின்றதாம். ஆனால், கறுப்பு வெளுப்பு என்ற இணையில் அவ்வாறு நிகழாது இரண்டும் இணைந்தபோது, வெளுப்பென்பதன் ஒருவகையான வெளிறே தோன்றுவது எங்ஙனம்? இக்கொள்கைப்படி செம்மையும் பசுமையும் ஒன்றுசேர்ந்தால், ஒன்றையொன் றழித்துவிட வேண்டுமன்றோ? ஆனால், அவ்வாறு அழித்துவிட வில்லை என்று ஆராய்ச்சிவாணர்கள் செய்க்காட்சி வழியாக நமக்குக் காட்டுகின்றனர். ஆகவே இக்கொள்கை முழுதும் பகற்கனவாக ஒழிகிறது.

வளர்ச்சிமுறைக் கோள்கை :— லட் என்பவரும் ப்ராங்க்லின் என்பவரும் வளர்ச்சிமுறைக் கொள்கை வழியாக இவ்வுண்மைகளை விளக்கிவைக்கின்றார்கள் நிறவணு சிறப்புநிலை யடையாது இருந்தபோது, தொடக்கத்தில் வெளிறு தோன்றும் முறையொன்றே காணக்கிடந்தது. பின்னர், அந்நிறவணு (நிறத்துகள் Color molecule) சிறப்புநிலையுற்று வேறு பிரிந்தபோது, எதிர்நிலை இயக்கமாம் மஞ்சள் தோற்றமுறையும் கருமை தோற்றமுறையும் எழுகின்றன. பின்னும் வளர்ந்து சிறப்புநிலையுற்றபோது மஞ்சட்பிவினின்றும் இரண்டுகிளைகள் பிரிந்தன. பசுமை தோற்றுமுறையும், செம்மை தோற்றுமுறையும் ஆன இரண்டு எதிர்நிலைஇயக்கங்கள் தோன்றின. இந்த விரண்டு எதிர்நிலை இயக்கங்களையும் ஒன்றுசேர்த்தால் மஞ்கள் தோன்றுகின்றதேயன்றி வெளிறு தோன்றுவதில்லை. மஞ்சளியக்கத்தையும் கருமையியக்கத்தையும் ஒன்றுசேர்த்தால் வெளிறுதோன்றுகிறது. இக்கொள்கைப்படி, நான்கு தனிநிலை நிறங்கள் இருக்க அவற்றில் மூன்றே முதனிலை நிறங்களாக விளங்குதலின் உண்மை தெளிவாகின்றது. முன் கூறிய கொள்கையிற்போல இக்கொள்கைப்படியும் ஆக்க இயக்கங்கள் நரம்புக்கிளர்ச்சியைத் தூண்டுகின்றன. மேலும், இக்கொள்கைபின்படி கறுப்பு எவ்வாறு தோன்றுகின்றது என்பது விளங்கவில்லை. ஆனால் மற்றைய கொள்கைகளைவிட இக்கொள்கை பல உண்மைகளை விளக்கிவைக்கின்றது.

கம்பராமாயணம்

அயோத்தியா காண்டம்— 3. கைகேசி சூழ்வினைப் படலம்.

[94-வது பக்கத் தொடர்ச்சி]

பேயும்நனி யீயும்மோரு பெருந்தகை யாமோ!

"திசைத்ததுமில்லை தனக்குத் நிபோர் வந்தொன்றும் இசைத்ததுமில்லை" எனக் கூசாது சாற்றி வாய்தந்த வரங்களை அன்று வழங்காக்கால் தயரதன் தலையில் மாளா மீள்பழி சுமத்தித்தான் மாள்வள் என்னும்

இந்த நெடுஞ்சொலவ் வேழை கூறுமுன்னே
வெந்த கொடும்புணில் வேனுழைந்த தொப்பச்
சிந்தை திரிந்து திகைத்தயர்ந்து வீழ்ந்தான்
மைந்த னலாதுயிர் வேறிலாத மன்னன்

[இந்த நெடிய சொற்களைக் கைகேசி கூறுவதற்கு முன்னே, பிள்ளையைத் தவிரத் தனக்கு வேறு உயிரில்லாத அரசன், தீப்பட்டு வெந்த கொடிய புண்ணில் வேல் நுழைந்ததுபோல் மனந் தடுமாறித் திகைத்துச் சோர்ந்து வீழ்ந்தான்]

கைகேசியைக் கம்பர் இப்பொழுதும் ஏழை என அழைத்தல் அவள் நஞ்சிலா உள்ளத்தையே வற்புறுத்துவதாகும். இவ்வாறின்றித் "தீயவை யாவையினுஞ் சிறந்த தீயாள்" என்றும், "தன்னேரில்லாத் தீயவள் உள்ளந் தடுமாறுள்" என்றும், "இரும்பினன் இயன்ற நெஞ்சிற் கொன்றுழல் கூற்றமென்னும் பெயரின்றிக் கொடுமை பூண்டாள்" என்றும், அக்கைகேசியைக் கம்பர் குறிக்கின்ற இடங்களிலும், இவளது தீமைக்கோர் சிறப்புண்டெனக் காட்டி அதனையுமவள் பூண்டதே எனவும் பகர்வதால் ஏனையோர் தீய செய்கையைப் போன்றதன்று இது என்னும் வேற்றுமையை விளம்பாமல் விளம்பிவைக்கின்றாரென ஒருவாறு எண்ணுதல் கூடும்.

பண்டைநாள் கோசிகன் வந்து, தான் செய்யும் வேள்விக்கு நிருதரால் இடையூறு நேராவண்ணம் காத்தல்பொருட்டு இக் கரியசெம்மலைத் தருவனத்திற்கு அனுப்புமாறு உயிரிரக்குங் கொடுங்கூற்றின் உளையக் கேட்டபோது அச்சொல், மருமத்தின் எறிவேல் பாய்ந்த புண்ணிலாம் பெரும்புழையில் கனல் நுழைந்தாலென்னத் தயரதனைத் தைத்தது என்ற கம்பர், இங்குத் துன்பத்தின் காரணமும் தன்மையும் பெரும்பாலும் ஒத்திருப்பதை உட்கொண்டு, வெந்த கொடும் புணில் வேல் நுழைவதென மொழிமாறினும் துன்பம் ஒன்றேயாய்த் துளைக்கின்ற செய்தியைச் சாற்றினார். ஆயினும் அயிர்த்தற்கொன்றுளது. முன்னர்க் கலங்கினனேனும் படையூற்றமிலாச் சிறுவனாயிருந்த தன்னுயிரனைய இராமனை, இடிநிக ரரக்கரைப் பொருதிடப் போக்கித் தான் பிரிந்து ஆற்றியிருக்கப் பின்னர்த் துணிந்த தயரதன், இன்று முற்றியதிறலுடையிராமன் முனிவர்களுடன் வனத்திடை ஈரெழு பருவங்கள் அமர்ந்துவரற் காற்றாது அழிந்து கழிந்ததற்குக் காரணம் யாதெனத் தெரிதற்கில்லை. நின்மகற் குறுத்த லாகலா உறுதி யெய்துநாள் மறத்தியோ" வென வசிட்டன் தேற்றியதால் அங்குத் தேறினன் என்னற்கு இயலும்படி இவ்வயின் வசிட்டன் வாழ்வு விளம்பி மன்னனைத் தேற்றிய பரிசு தோற்றவில்லை. அன்னவாறு தேறும் வகையற்று அஞ்சியகாலை முன் பரசுராமனது பாதங்களில், "இவனும் எனதுயிரும் உனதபயம் இனி" என்று புகுந்ததேபோல், 'மாகமும் நாகமும் மண்ணும் வென்ற வாளான்,' 'வீரியர் வீரம் விழுங்கிநின்ற வேலான்', 'வையகமுற்றும் நடந்த வாய்மையாளன்', 'கந்துகொல் யானைக் களிமன்னர் மேன்மேல் வந்து முந்திவணங்கி மிடைதாளான்' கைகேசியின் கான்மேல் வீழ்ந்து,

கொள்ளா ளின்னே யிவ்வர சன்னான் கொண்டாலு
நள்ளா திந்த நானில ஞாலந் தனிலென்று
முள்ளா ரெல்லா மோத வுவக்கும் புகழ்கொள்ளா
தெள்ளாநிற்கும்வன்பழி கொண்டென்பயனென்றான்.

[உனது மகன் பரதன் இவ்வரசை ஏற்றுக்கொள்ளமாட்டான், அப்படி அவன் கொண்டாலும் இந்தப் பூமியிலுள்ளோர் அதனை விரும்பார். ஆதலின் இவ்வரங்களை வற்புறுத்தாமல் விட்டு, அதனால் இவ்வுலகத்திலுள்ளவர்களெல்லாம் சொல்லிச்சொல்லி உவக்கும்படி புகழைவேண்டாமல், இகழ்தற்குரிய இக்கொடிய பழியைக் கொள்வதால் என்ன பயனை அடையப்போகின்றாய்]

வானோர் கொள்ளார் மண்ணவ ருப்பா ரினிமற்றென்
ஏனோர் செய்கை யாரொடு நீயிவ் வரசாள்வாய்
யானே சொல்லக் கொள்ள விசைந்தான் முறையாலே
தானே நல்கு முன்மக னுக்குந் தரையென்றான்.

[தேவர்கள் இதற்குச் சம்மதிக்கமாட்டார். பூலோகத்தவர் இதனைச் சகிக்கமாட்டார். நாகலோகத்தவர் செய்கையைப்பற்றிச் சொல்வானேன். எல்லாரும் இவ்வண்ணம் வெறுத்து அகன்றபின், யாரொடு நீ இவ்வரசை ஆள்வாய், நான் சொன்னதால் இராமன் முடிசூட முறைப்படி இசைந்தான். அவனே யாதும் வற்புறுத்துதலின்றி உன் மகனுக்கும் தேசத்தைத் தந்திடுவான்]

கண்ணே வேண்டு மென்னினு மீயக் கடவேனென்
உண்ணே ராவி வேண்டினு மின்றே யுனதன்றோ
பெண்ணே வண்மைக் கேகயன் மானே பெறுவாயேன்
மண்ணே கொண்ணீ மற்றைய தொன்றும் மறவென்றான்.

[பெண்ணே, வண்மையுடைய கேகயன் மகளே, என் கண்களை வேண்டினும் கொடுத்துவிடுகின்றேன். என் உள்ளுறையும் ஆவியை நீ வேண்டினாலும் அது உனதன்றோ; இவைகளன்றி நின் வரத்தின்படி என்னிடத்தில் பெற்றுக்கொண்டுதான் தீர்வதாகத் தலைநிற்பாயாயின், இவ்வரசைமாத்திரம் எடுத்துக்கொள், இராமன் வனத்திற்குச் செல்லவேண்டுமென்ற மற்றைய தொன்றையாயினும் மறந்து விடு, என்றான்]

பேதைத் தயரதன் படுந்துயர் மிகப் பெரிது. இன்னல் இவ்வண்ணம் எத்தனையோ பலர் உழன்றிருக்கின்றனர். ஆயினும், இதற்குக் காரணமாயவள் தீயவை யாவையினுஞ் சிறந்த தீயளா யமைந்தது போலவே, துயரம் யாவையிலும் சிறந்ததாய் நிற்கு மிந்தத் துயர். ஆண்டு ஒன்றன்று நூறன்று ஆயிரம் ஒன்றுமன்று, அறுபதினாயிரம் அரும்பெறல் மகவின்றி வருந்தினனொருவன் செயற்கரிய மகமியற்றிச் சேயொன் றெய்தினன். அக்குரிசிலும் தன் பிள்ளை என்னுந் தன்மையால் மாத்திரமன்றிக் குணத்தாலும் கல்வியாலும் வீரத்தாலும் பேரெழிலினாலும், கற்றவர் கற்றிலாதவரும் உண்ணு நீரினும் உயிரினும் அவனையே உவப்பவராகும்படி வளர்ந்து விளங்கு பவனாயினன். அவனுக்குத் துணைநின்ற மனைவியாம் பெரும்புகழ்ச் சனகியோ, "மண்ணினும் நல்லள் மலர்மகள் கலைமகள் கலையூர் பெண்ணினும் நல்லள்." இத்துணை நலங்களும் இணங்கிநிற்க இழக்கவோ இதனையென்ன அழல்கின்றதுமன்னனுள்ளம் இழக்க நேர்வதும் எதனால்! தெய்வத்தாலன்று, தெவ்வராலன்று, தீயனைய பூதத்தாலன்று, நோயுற்ற ஊழினாலன்று, பேயினுங் கொடியதோர் தாயினாலென்றால், எத்தந்தை இத்தீமைக்கு இதன்முன் ஆளாகி நின்றுளான். அவளேதான் இழைத்தாளோ வெனின் அதுவுமன்று. தன்னைக்கொண்டே செய்விக்கின்றாள். வன்தாளின் இணைவணங்கி வளநகரந் தொழுதேத்த மன்னனாவான் நின்ற நம்பியை நெடுங்கானம் படரப் போ வென விதிக்கவேண்டியவன் தானேயாய் முடிகின்றான் தயரதன். எற்றுக்கிது, மறுத்தாலோ வெனின், அதுவும் இயல்வதில்லை. வாய்மையென்னும் வன்தொடரால் பிணிப்புண்டு செயலற்றுக் கிடக்கின்றானே. உண்மையென்னு மொன்றுமின்றி அது சாகவென நோகலாம் எனினும் இருக்கும் வரை அதனைக் கைவிட்டு வல்லான்வகுத்ததே வாய்க்கால் என்னும் பெருவழக்கைப் பின்பற்ற நாணிற்று இத்தொல்குல மன்னவன் நன்மனம். பொய்த்தானெனின் அப்பொய்மையில் புரைதீர்ந்த நன்மை காணக் கற்றிலன் இக்கள்ளமில்லா உள்ளத் தூய்மையோன். வாய்மையை இழப்பதோ வள்ளல்இராமனை இழப்பதோ என்னும் அரியநிலையின் அந்தரத்தில் இழக்க வல்லது யாதெனும் ஐயம் அப்பெருந்தகைக் கில்லை. இருப்பதெனின் வாய்மையும் வள்ளலும் ஒருங்கே காத்திடுக, இரண்டினின் ஒன்றேயெனின் ஒழிவதும் ஒப்பிலாப்புதல்வனே யாகுக, என்னும் நிலையில் தளர்ந்திலன். சிறிதுபின்னர் வசிட்டனை,

..............வினையே னினியான்
பொன்றும் மளவில் லவனைப்புனைமா மகுடம்புனைவித்
தொன்றும் வனமென் றன்னு வண்ணஞ் செய்தென்
குன்றும் பழிபூ ணுமற் காவாய் கோவே [னுரையுங்

என்று வேண்டுமிடத்தும் வாய்மையைத் துறத்தலென்னுஞ் செய்தியை அறவே அகற்றிப் பேசுவான். 'பெறுவாயேல் மண்ணை கொள்' என அரசினை இராமன் அடையவேண்டுமென்பதை இந்நிலையில் பொருள்படுத்தாது கைகேசியினிடத்தில் உரைத்த மன்னன், அவனைப் புனைமாமகுடம் புனைவிக்க வேண்டு மென்பதையும் நயந்திங்கு உரைத்ததென்னென வியக்கவேண்டா. ஒன்றிற்கு மிணங்காளவ்வன்னெஞ்சளென நிச்சயமடைந்த நிலையில் இதுவேனுங் கைகூடினாற் போதுமென நயந்த மனம் அது. இங்கு வசிட்ட முனிவனை மேற்கொண்டால் கருமம் முடிவ தியலும் எனும் விருப்பினால் இரண்டையும் நயக்கின்றான் என்பதல்லால் வேறில்லை ஆதலின்,

வாய்தந் தேனென் றேனினி யானே வதுமாற்றேன்
நோய்தந் தென்னை நோவன செய்து நுவலாதே
தாய்தந் தென்னத் தன்னை யிரந்தாற் றழல்வெங்கட்
பேய்தந் தீயு நீயிது தந்தாற் பிழையாமோ

[கொடுத்து விட்டேனென்று யான் கூறிவிட்டேன். இனி ஒருபோதும் அதனை மாற்றமாட்டேன், துன்பம் விளைத்து என்னை வருத்துகின்ற வார்த்தைகளைச் சொல்லாதே, நெருப்புப்போன்ற கொடிய கண்களையுடைய பேயும், தன்னை இரந்தால் தாயைப்போல் கொடுக்குமே. நீ இதனைத் தந்தால் பிழை ஆகுமோ]

என வேண்டினன். இதற்கிணங்காததாற்றான் பரதன் வந்து அனைத்தையும் அறிந்த பிற்றைநாள்,

நோயீ ரல்லீர் நுங்கண வன்றன் னுயிருண்டீர்
பேயீ ரேநீ ரின்ன மிருக்கப் பெறுவீரே

என்று கடிந்து வைதனன். நோய் சென்று ஒருயிரைப் பற்றியதெனின் அவ்வுயிரைக் கொன்றதுடன் தானும் பின் இருப்பதென்பதின்றி உடன் மாய்ந்து தீரவேண்டியதே. கணவனைக் கொன்றுபின்னும் இருக்கின்றாளாதலின் இவள் அவனுக்கு நோயோ அல்லள். உயிரைச் செகுத்தும் இன்னு மிருக்கவல்லது பேயேயாதலின் அதனையே போன்றனள் கைகேசி. தந்தை இவளைப் பேயென அயிர்த்தான்; மைந்தனோ பின்னர்ப் பேயேயென உணர்ந்தான். ஆயினும், பேயும் தன்னை யிரந்தார்க்குத் தாயெனத் தந்தீயுந் தன்மையை எங்குக் கண்டிருந்தனனோ இம்மன்னவன்! உள்ளுவோர் அகத்திருந்த தன்மையே பூசப் பெற்றுப் புறப்பொருள்களும் அவர்களுக்குத் தோன்றுகின்றன போலும். இரக்கமே உருவமாய இப்பெருந்தகைக்கு அவ் விரக்கமென்பது முற்றிலும் அற்றதொன்று, மக்கள் தேவர் நகரில் இருத்தற்கியலுமென்னும் துணிவு தோன்றியதில்லை. ஆதலின், இபற்கைநயம்படத் "தன்னையிரந்தால் பேய் தந்தீயும்" என்றனன் இவன். பேயும் ஒருபோது தாயொக்கும் என்றான் தந்தை; மைந்தன் அது அமையாமையைத் தேர்ந்தானாகித் தாயும் பேயே ஆயினள் எனப் பின்னர் மாற்றினான்.

கூரிய மதியினள் அக்கேகயன்மடந்தை. இரப்பான் போன்ற குரலினால் இன்னே இன்னே பன்னினனாயினும் மன்னவன் தன்னை முனிகின்ற நுண்மையை உணர்ந்தனள். உணர்ந்து,

முன்னே தந்தா யிவ்வரம் நல்காய் முனிவாயேல்
என்னேமன்னா யாருளர் வாய்மைக்கினியென்றாள்.

வெந்தபுண்ணில் இதனினும் கடியவேகக் கொடுவிடம் பூசிய வேல் இதுகாறும் நுழைந்ததில்லை. "வரமிரண்டும் நீ தருதலில்லையேல் மாள்வென்" என அச்சுறுத்தியதற்கு, "ஆ, ஆ, குணத்தில் பக்ஷமுள்ளவனாயும் எப்பொழுதும் பிரியமாகவே பேசுகின்றவனாயுமுள்ள இராமனிடத்தில் ஏன் இவ்வண்ணமாகக் கெட்ட எண்ணங் கொண்டு நீ பேசுகின்றாய். கேகய குலத்தைக் கெடுக்கவந்தவளே, நீ கெட்டுத்தான்போ, அக்கினியிற்றான் விழு, செத்துத்தான்போ. ஆயிரந் துண்டங்களாகப் பூமியில் வெடித்துத்தான் விழு" என வான்மீகத்தில் கழறிய முனிவெலாம் அடக்கி இரந்த இந்தத் தயரதனை, "என்னே, மன்னா, நீ முனிதியேல், யாருளர் வாய்மைக்கு இனி" என எடுத்துரைத்த நாவின் வலியது வேறிலது. ஒருவனை உழக்குங்கால் அவனது புன்மையைப் பகர்ந்துபகர்ந்து பழிப்பதனினும் அவனுடைய மேன்மைக்கு இழுக்குளதெனக்காட்டி உழக்குவதே உறக் கொடியது. ஆதலின்,

அச்சொற் கேளா வாவி புழுங்கா வயர்கின்றான்
பொய்ச்சொற் பேணா வாய்மொழி மன்னன் பொ
நச்சுத்தீயேபெண்ணுருவன்றேவெனநாணு [றைகூர
முச்சற் றூர்போற் பின்னு மிரந்தே மொழிகின்றான்

[அந்தச் சொற்களைக் கேட்டு உயிர் புழுங்கிச் சோர்ந்தவனாகிய அந்தப் பொய்வார்த்தையைப் பேணாத வாய்மொழி

யையுடைய மன்னன், ஒருவாறு பொறுமை யடைந்து, விஷத்தீயன்றோ பெண்ணுருவாவது என எண்ணுதற்கு (பிறர்பழிக்கு நாணுபவனுதலால்) நாணங்கொண்டு, மூர்ச்சையடைந்திருந்து, பின்னும் அவளை இரந்தவனுய்ச் சில சொல்லலானன்.]

'வஞ்சனை பண்டு மடந்தை வேடம்' எனச் சிலர் எண்ணலாம் என நாணினர் முன் கம்பர். கைகேசியின் கொடுமை நேரேசென்று தைத்திருந்த தயரதன் வஞ்சனையின் வேடத்தோடு நில்லாமல் மாதரை நச்சுத்தீயின் உருவமே யென உரைக்க எண்ணியது இயற்கையே எனினும் அவ்வாறு எண்ணற்கு நாணினனுயினன். பின் நாணினரேனும் முன் இன்னபடி எண்ணற்கு இவர்களுக்கு இங்குக் கைகேசி நியமாயினள். மற்றுச் சேக்கிழார் பெருமான், பகலவன் குடதிசைச் சாய்ந்தபின் வந்தடைந்த இரவினை,

பஞ்சின் மெல்லடிப் பாவைய ருள்ளமும்
வஞ்ச மாக்கள்தம் வல்வினை யும்அரன்
அஞ்செ ழுத்து முணரா வறிவிலோர்
நெஞ்சும் என்ன இருண்டது நீண்டவான்

என்னத் தடுத்தாட் கொண்ட புராணத்தில் பாவையர் உள்ளத்தே வல்லிருள் ஆழ்ந்திருக்கக் கண்ட தெவ்வாற்று லென்பதைத் தேர்கிலேம்.

பச்சைப் பேயாயினும் நச்சுத்தீயாயினும் நங்கை யென்று நின்ற இவள்வயின் இரந்தே இன்றிகொள்ள வேண்டியது இன்றியமையாதது ஆனதால் தயரதன்,

நின்மக ளுள்வா னீயினி தாள்வாய் நிலமெல்லாம்
உன்வய மாமே யாளுதி தந்தே னுரைகுன்றே
னென்மக னென்க ணென் னுயி ரெல்லா வுயிர்கட்கு
நன்மக னிந்த நாடிற வாமை நயவென்றான்

[உன்மகனே யாளட்டும், நீயும் அவனோடு இனிதிருந்து ஆள்க. உலகமெல்லாம் உன்வயம் ஆகும், ஆள்க. கொடுத்தேன். இச்சொல்லின் இனிக் குறைபமாட்டேன். என் மகன் என்கண் என்உயிர் எல்லா உயிர்களுக்கும் நல்லவனுயிருக்கும் இராமன்மாத்திரம் நாட்டினின்று நீங்காதபடி நீ விரும்பியருள்வாயாக, என்றான்]

மெய்யே யென்றன் வேரற நூறும் வினைநோக்கி
யையா நின்றே னுவு முலர்ந்தே னளினம்போற்
கையா னின்றென் கண்ணெதிர் நின்றங்கழிவானே
லுய்யே னங்கா யுன்னப யம்மென் னுயிரென்றான்.

[என்னுடைய வேர்எல்லாம் கெடும்படி சத்தியமே அழிக்கின்ற இக்காரியத்தை நோக்கித் தளர்கின்றேன். என் நாக்கும் உலர்ந்து விட்டது. தாமரைபோன்ற கைகளையுடைய இராமன் இன்று எதிர்விட்டு அகல்வானுயின், நான் பிழைக்கமாட்டேன், நங்காய், என்உயிர் உனது அபயம் என்றான்]

பார்த்திபன் இவன், நிலந்தோயாக் காலில் விழுந்தழுங்கால் பேயும் தந்தீயுமே ஈயும் எனினும், இந்நங்கையோ நைந்தாளல்லள், நாணினளல்லள். இராமன்பால் இரக்கமிவள் அறவே துறந்தனள் என்பதை யுன்னித் தயரதன் அவன்பொருட்டு வேண்டாமல் தன்னுயிரையே அடைக்கலமாக்கினன். முன் "இவனும் எனதுயிரும் உனதபயம் இனி" எனப் பரசுராமனைத் தன்மைந்தனோடு தன்னுயிரையுஞ் சேர்த்துத் தஞ்சமடைந்த தெல்லாம் பயனற்றுப் போனது போலவே தன் னுயிர்க்கு அபயம் வேண்டியதும் இங்கு வீணாயாயிற்று.

நம்பிக்கையுள்ள - - - ஔஷதம்

அஜீரணம், மலச்சிக்கல், தேக அசதி, ஞாபகக்குறைவு, நரம்புகளின் தளர்ச்சி முதலிய வியாதிகளுக்கு எங்கள்

ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்

நம்பிக்கையுள்ள ஔஷதம். ஆயிரக் கணக்கான ஜனங்கள் உபயோகித்துக் குணத்தை யடைந்திருக்கிறார்கள். நீங்களும் உபயோகித்துக் குணத்தை யடையுங்கள்.

32-மாத்திரைகளடங்கிய
டப்பி 1-க்கு விலை ரூ. 1

கேட்லாக் இனும் !

ஆதங்க நிக்ரஹ
ஔஷதாலயம்,
26, பிராட்வே,
சென்னை.

புதுவருடச் சந்தாப் பணத்தை வி. பி-க்குக் காத்திராது மணியார்டர் மூலம் அனுப்பி வைக்குமாறு நேயர்களைக் கேட்டுக் கொள்கின்றோம். புதிய ஆண்டு முதல் வி. பி. களை மூன்று நாட்களுக்கு மேல் தபால் நிலயத்தார் வைத்துக்கொள்ள மாட்டார்களாதலால், மணியார்டர் மூலம் சந்தாவைச் செலுத்துவது எமக்கு மிகவும் உதவியாக விருக்கும். வி. பி. அனுப்ப நேருங்கால், தாமதம் செய்யாது பணம் கட்டிப் பத்திரிகையை ஏற்றுக்கொள்ளும்படி நேயர்களை வேண்டிக் கொள்ளுகின்றோம்.

மானேஜர்.

நோயற்ற :: :: வாழ்வே | **ஆரோக்கிய வாழ்க்கைக்கேற்ற இரு அருமருந்துகள்** | குறைவற்ற : : செல்வம்

"ஸித்தகல்ப மகரத்துஜம்"
(ரிஜிஸ்டர்ட்)

தேகத்திலுள்ள கொடியவியாதிகளை நீக்கி இரத்தசுத்தி செய்து, நரம்புகளைப் பலப்படுத்தி மூளைக்கு ஞாபக சக்தியையும் தேகத்திற்குப் பலத்தையும் அளிப்பதில் இம் மருந்து ஒப்புயர்வற்றது. இவ்வரிய ஔஷதத்தின் பெருமையைப் போற்றாத வைத்தியர்களே யில்லை. தேக ஆரோக்கியத்தைப் பெருக்கி வாழ்நாட்களை வளரச்செய்யும் சக்தி இம்மருந்தில் நன்கு அமைந்திருக்கிறது. ஒரு புட்டி மருந்தே தேகத்தை வலுப்படுத்தவும், ஜீவசக்தி, ஞாபக சக்தி பெறவும் போதுமானது. மூளையைக் கொண்டு பிழைப்பவர்களுக்கு இது ஓர் வரப்பிரஸாதம்.

60 மாத்திரைகள் கொண்ட புட்டி ரூபா **10**

"மஹா சந்தனாதித் தைலம்"

ஒப்புயர்வற்ற இத்தைலம் மூளைக்குப் பலத்தை அளித்து ஞாபக சக்தியை வளர்ப்பதிலும் நரையை நீக்கி, கூந்தலைக் கருமையாகவும் மழமழப்பாகவும் வளர்ச்சி செய்து அறிவையும் ஆற்றலையும் வளர்ப்பதில் பெயர்பெற்றது. கபால உஷ்ணம், மறதி மனச்சோர்வு, மயக்கம் மந்தப் பார்வை, தலைவலிபோன்ற நோய்களைப் போக்கி ஆனந்தத்தை அளிக்க வல்லது. மூளையைக் குளிர்ச்சி செய்து மனோரம்மியத்தை வளர்க்கும் இத்தைலம் ஆயிரக் கணக்கானவர்களால் போற்றப்பட்டது. ஒரு முறை உபயோகித்துப் பார்த்தால் இதன் அபாரசக்தியும் பெருமையும் நன்கு விளங்கும்.

1 மாதத்திற்கு உபயோகிக்கக்கூடிய 12 அவுன்ஸ் புட்டி விலை ரூபா **5**.

உங்கள் நரம்புகளையும், தேகத்தையும் பலப்படுத்தவும், ஞாபக சக்தியைப் பெறவும், நோய்களிலிருந்துவிடுதலையடைந்து ஆரோக்கிய சுயராஜ்யத்தைப் பெறவும் சுலபமான வழி,

ஆயுர்வேத ரத்ன பண்டிட் டாக்டர். N. V. ஸ்ரீ ராமாசார்லு அவர்களின்

இணையற்ற ஔஷதங்களிலேயே இருக்கின்றது. அவைகளை உபயோகித்து இன்ப வாழ்வு நடத்தச் சிறிதுந் தயங்காதீர்கள்.

மதராஸ் ஆயுர்வேதிக் பார்மஸி லிமிடெட் சென்னை.

தபால் பெட்டி 151, சென்னை. கேட்லாக் இனும். தந்தி விலாசம் 'கல்பம்' சென்னை.
மானேஜர்.—வி. ரகுபதி, B.A.,B.L. ஏஜண்டுகள் தேவை. விவரத்திற்கு எழுதவும்.

இனும்! இனும்!!

வைத்திய வித்தியா

யௌவனம் என்னும்பொக்கிஷத்தையும்ஆரோக்கியமென்னும் குன்றாத செல்வத்தையும் விரும்பும் ஒவ்வொரு ஸ்திரீயும் புருஷனும் இப் புத்தகத்தை வாசித்துச் சுகமடையலாம்.

மதனமஞ்சரி பார்மஸி,
1/94, சைனு பஜார், மதராஸ்.

அரசாங்க இஞ்சினியர்களால் மதிக்கப்பெற்ற

மோட்டார்கார் இயந்திர சாஸ்திரமும் :: :: அதன் அநுபவப் பயிற்சி முறையும்

முதல் பதிப்பு விலை ரூபா 1. இரண்டாம் பதிப்பு 50 படங்களுடன் 200 பக்கங்கள் விலை ரூபா 2. தபால் சார்ஜு வேறு. வெளிநாடு ஆர்டர்களுக்கு முன்பணம் அனுப்பவேண்டும். ஏஜண்டுகள் தேவை.

எங்கள் மோட்டார் ஸ்கூல் 1916ல் ஸ்தாபிக்கப்பட்டது. இதில் 3 மாதத்தில் மோட்டார் டிரைவிங் அண்டு மெகானிஸம் கற்றுக்கொடுத்துக் கவர்ன்மெண்டிலசென்ஸும் பாடசாலைச் சர்டிபிகேட்டும் கொடுக்கப்படும்.

தென்னிந்தியா
மோட்டார் இஞ்சினீரிங் ஒர்க்ஸ் & பாடசாலை,
மைலாப்பூர் :: சென்னை.

Estd. NATIONAL 1906

INSURANCE COMPANY LIMITED.

Head Office:-**9, Old Court House St., Calcutta.**

Before taking out a life assurance policy it is better to apply all the rigid tests for a good company.

The "National" will surpass any other Company in these tests.

(1) Indian Capital-Indian Management-for the benefit of Indians.
(2) The Company has never contested a claim on a technicality.
(3) The low safe rates of premium provide maximum assurance at minimum cost.

The "National" keeps well ahead of the times and its policy of 'fair and square dealing' which began with its founding, ever since 1906, has been continuous.

For Particulars & Agency terms.

Apply to:— R. G. DAS & CO., *Managers.*

T. ANANTACHARI, B.A.,
Branch Secretary.

NATIONAL INSURANCE COMPANY LTD.,
Madras Branch, Lo[illegible]
Broadwa[illegible] Madras.

Agents Wanted Eevery—where.

Write for Particulars.

188904

— லோத்ரா —

ஸ்திரீகளுக்கு

மகிழ்ச்சியையும்

ஆரோக்கியத்தையும் தரும்.

— அம்ருதா —

இரத்தத்தைச் சுத்தி செய்யும்.

— அர்கா —

ஜுரத்தைப் போக்கும்

எல்லா மருந்துக்கடைகளிலும் கிடைக்கும்.

கேசரி குடீரம்

இந்திய கெமிஸ்ட் & டிரக்கிஸ்டு.

எழும்பூர் :: :: சென்னை.

அசோகா சால்ட்

(ரிஜிஸ்டர்ட்)

(அசோகா உப்பு)

ஆரோக்கியத்தைப் பாதுகாக்கவும் நோய்கள் வாராமல் தடுக்கவும் அசோகா உப்பு ஓர் அரிய மருந்து.

உணவை நன்ருகச் செரிக்கச்செய்து யாதொரு வருத்தமின்றி நாள்தோறும் மலத்தைக்கழிக்கும் சிறந்த குணமுடையது.

அஜீர்ணம், பித்தவாயு, புளி ஏப்பம், குலை எரிச்சல், வயிற்றுவலி, குன்மம், மார்புவலி, இடுப்புநோய், தலைமயக்கம் முதலிய நோய்களை நீக்க வல்லது. பாண்டு, சோகை, காமாலை, ஜுரம், மகோதரம், அஜீர்ணம், பேதி, கணைச்சூடு, வெட்டைச்சூடு, மூலம், கரப்பான், சிரங்கு, குடல் கிருமி, மலச்சிக்கல், போன்ற நோய்களைப்போக்கி எவ்விதப் பிணியும் அணுகாமல் காக்கக் கூடியது அசோகா உப்பே யாகும்.

விலை ரூ 1-8-0 தபால்செலவு வேறு.

அசோகா கம்பெனி,

லிமிடெட், சென்னை.

பி. வி. ராஜன் பட்டணம் பொடி



காரம், மணம், குணம், நிறம் வாசனைகளால் மேன்மையுற்றது. நெ. 1 ஸ்பெஷல் ரகம் பொடி-வீசை ரூ-4. டைசாதா ரகம்பொடி வீசை ரூபா 3½. டாக்டர் B. S. மல்லையா M.B., & C.M., & M.L.C. அவர்கள் பரிசோதித்த R.S. சுகந்த மூக்குத்தூள் விலை பாட்டில் 1-க்கு அணு 4. டஜன் ரூபா 2¼ டை ஒரு சேர்டின் ரூபா 1¾ வி பி, ரயில் சார்ஜ் வேறு.

பி. வி. ராஜன் அண்டு கம்பெனி,

நெ.44 கோவிந்தப்ப நாயக்கன் வீதி, மதராஸ்.

தந்தி விலாசம் "நஸ்யம்",

ராமுலு—13

		Rs.	As.
1.	ஸங்கீத சிந்தாமணி	3	0
2.	திராவிட கானம்	3	0
3.	ஸங்கீத சில்லரைக்கோர்வை	3	0
4.	கிர்த்தன ரத்னங்கள்	1	4
5.	சங்கீதத் திருப்புகழ்	0	8
6.	ராஜேந்திர மோஹனு	1	0
7.	திகம்பர சாமியார் பால்ய லீலைகள் ...	5	0
8.	ரமாமணி	2	0
9.	சரோஜனி	2	0
10.	வசீகரண தந்த்ரம்	2	0
11.	அநுபவ சிந்தாமணி	1	0
12.	Kissing in Practice	2	0
13.	Fruits of Married Love	0	12

காலண்டர், கேட்லாக் இனும்!

M.S. ராமுலு & கம்பெனி, ராயபுரம், மதராஸ்.

33 வருஷங்களாக உலகப்பிரசித்தி பெற்றுவரும்

வைத்ய ரத்ன பண்டிட் D. கோபாலாசார்லு அவர்களின்

ஜீவாமிருதம் (ரிஜிஸ்டர்ட்)

இதைத் தினந்தோறும் போஜனத்தின் பின் இரண்டுதரம், முறைப்படி சாப்பிட்டுவந்தால், பலஹீனம், மலபந்தம், தலைவலி, நரம்புத்தளர்ச்சி, ரத்தமின்மை, ரக்த சோகை, அஜீர்ணம், ஆயாசம், மனச்சோர்வு, ஞாபகமின்மை, தூக்கமின்மை, பசியின்மை முதலியவைகளைப் போக்கி, சரீரத்தில் மிகுந்த சுத்த ரக்த ஓட்டத்தையும், மிகுந்த வலிவையும், நிறைந்த ஆரோக்கியத்தையும் கொடுத்து வாழ்க்கையை இன்பமுறச் செய்வதுடன் தசைகளை வலுப்படுத்தி, வீர்யத்தை பெருகச் செய்கின்றது.

கேட்லாக் இனும்.] விலை புட்டி 1-க்கு ரூ. 3-4-0. எல்லாவிடங்களிலும் கிடைக்கும். [ஏஜண்டுகள் தேவை.

ஆயுர்வேதாஸ்ரமம், 151, கோவிந்தப்பநாய்க்கன் வீதி, தபாற் பெட்டி நெ. 287, மதராஸ்.

(1898-ல் ஸ்தாபிக்கப்பட்டது.)

டெலிபோன் நெ. 2191. தந்தி விலாசம், "பண்டிட்"

அருமையான பொடி! 32 தங்கமெடல்கள் பரிசுபெற்ற உடனே ஆர்டர் செய்யுங்கள்!!

பட்டணம் பொடிக்களஞ்சியம் பட்டணம்பொடி

காரம், மணம், குணம், சுகம், நிறம், வாடை இவை ஆறும் அமைந்துள்ளது.
விலை விபரத்திற்கு எழுதுக.

பட்டணம் பொடிக்களஞ்சியம்,

147, கோவிந்தப்ப நாயகன் தெரு, மதராஸ்.

தபால் பெட்டி, நெ:—156

புரொப்ரைடர்:— ஷண்முக முதலியார் பௌத்திரர்,

R. K. ஜெயராம் முதலியார்.

சமையல் – –

சுகம் – –

வேண்டுமானல்

ருக்மணி

குக்கர்

வேண்டும்

இது நாடறிந்த விஷயம். அநுபவசாலிகள் தம் செயலைப் பின்பற்றி நீங்களும் ஒரு அடுக்கு வாங்குங்கள்.

1, 2, 4, 6, 8, 12, 16 பேர்களுக்குரிய எழு அடுக்குகள் ரூ. 12, 16, 20, 25, 31, 37, 44. விபர புத்தகம் இனும்.

ருக்மணி குக்கர் கம்பெனி,

இராயப்புரம் (12) சென்னை.

தமிழ் நீதிப் போர்டுகள்

(Tamil Wisdom Boards)

'அறஞ்செயவிரும்பு', 'இன் சொல் இயம்பு' என்பவை போன்ற 25 நீதிகள் 13" × 8½" அளவில் அச்சிட்டுக் கலிக்காவிஞல் விளிம்பு கோத்த கனத்த அட்டையில் ஒட்டப்பெற்றிருக்கின்றன. கல்லூரிகட்கும், வாசகசாலைகட்கும், நூல்நிலையங்கட்கும், வீடுகட்கும் வேண்டப்படுவன.

		ரூ.	அ.
தனி நீதி அட்டை விலை		0	3
12 நீதி அட்டைகள்	,,	2	0
ஒரு செட் 25 நீதி	,,	4	0

சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம்

லிமிடெட்,

6, பவளக்காரத் தெரு, சென்னை.

செந்தமிழ்ச் செல்வி

ஒன்பதாவது ஆண்டு

ஓர் அரிய செந்தமிழ் மாதப்பத்திரிகை. 10-2-31முதல் வெளிவருகின்றது. மாதிரிப் பிரதி விலை அணு 2. ஆண்டு சந்தா ரூ. 3.

பிரசோற்பத்தி வருட சைவப்பஞ்சாங்கம்

தனிப்பிரதி விலை அணு 1½. கிளேஸ் அணு 2. வியாபாரிகட்குத் தக்க கழிவு தரப்படும்.

செந்தமிழ்ச் செல்வி ஆபீசு,

6, பவளக்காரத் தெரு, சென்னை.

வித்வான் த. சண்முக கவிராயரின்

:: மகா பாரதம் தமிழ் வசனம் ::

திருத்தமான உயர்ந்த பதிப்பு

இது சிறந்த கிளேஸ் காகிதத்தில் நன்குஅச்சிடப்பட்டு கலிகோ பைண்டு செய்யப்பட்டிருக்கிறது.

(1) ஆதிபர்வம் ரூ. 3. (2) சபா, ஆரணிய, விராட பர்வங் அடங்கியது ரூ. 5. மற்ற பர்வம் அச்சில்.

பாலவிநோதினி ஆபீஸ், 323, தண்டையார்ப்பேட்டை, வண்ணரப்பேட்டை போஸ்ட், மதராஸ்.

உயர்ந்ததும், சிறந்ததுமான மூக்குக் கண்ணாடிகள் வாங்குவதற்கு உத்தரவாத முள்ள இடம் இதுவே.

விலைகள் சரசம், புதுமாதிரியான கண்ணாடிகள் எப்பொழுதும் கைவச மிருக்கின்றன. மாணவர்களுக்கு ஸ்பெஷல் கமிஷன் கொடுக்கப்படும். விலை விபரத்திற்கு எழுதுக.

எம். ஏ. சாரி அண்டு கோ., மூக்குக்கண்ணாடி வியாபாரிகள், நெ. 8. பிராட்வே, சென்னை.

என். ஜே. தேசாய்ஸ்

உயரிய உத்திரவாதமுள்ள
கஸ்தூரி
மாத்திரையையே
எப்போழுதும் உபயோகியுங்கள்.
ஆண், பெண், குழந்தைகளுக்கு
இன்றியமையாத
ஓர் சிறந்த டானிக்
250 மாத்திரை கொண்ட
புட்டி அணு 6. டஜன் ரூபா 3.
தபாற் கூலி இனம்.

24-மணி நேரத்தில் ஆச்சரிய குணம்!!!
உயரிய உத்திரவாதமுள்ள
சர்வ படை மருந்து

டப்பி 1-க்கு விலை அணு 6. டஜன் ரூபா 3.
தபாற் கூலி இனம்.

மிகுந்த மணம்! சிறந்த குணம்!!
- பால் பெருங்காயத்தை -
உபயோகியுங்கள்.

கருப்புப் பெருங்காயம் ஒருவீசை உபயோகிப்பதற்கு இது ஒரு தோலாஉபயோகித்தால் போதுமானது. டப்பி 1-க்கு விலை அணு 4. டஜன் ரூபா 3. தபாற் கூலி இனம்.

சிறந்த நோய் நிவாரணி
ஆர்யாஞ்ஜன்
எல்லா வலிகளையும், வீக்கங்களையும், நோய்களையும் நீக்குவதில் ஒப்புயர்வற்றது.
புட்டி 1-க்கு விலை அணு 8.

எல்லா இடங்களிலும் கிடைக்கும். 88, தங்கசாலை வீதி, சென்னை.

N. B. விபர கேட்லாக்கிற்கு எழுதவும். சென்னைக்கும் வெளியூருக்கும் விற்பனை வியாபாரிகளும், கான்வாஸர்களும் தேவை. கடிதங்கள் இங்கிலீஷில் எழுதுக.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட், சத் வைத்தியசாலை,
நஞ்சன்கூடு பல்பொடி நஞ்சன்கூடு.

குழந்தைகளுக்கு:
ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை
கோரோசனை மாத்திரை
சித்ர தைலம்,
"பால சுதா" (Reg.)
அமிர்தாமலக தைலம்
குழந்தை கட்டிக்கும்
ஜ்வரக் கட்டிக்கும்



டானிக்குகள்:
சாவனப்பிராசா
திராக்ஷாபாக
பாதாமி ரசாயனம்
ஜீவஸுதா (Reg.)
பிருங்காமலக தைலம்
ஸ்பெஷல் மருந்து (15 நாட்களுக்கு ரூ. (2-0-0)பிரான்சு:

டிப்போ, பம்பாய் கல்கத்தா NANJANGUD TOOTH POWDER SADVAIDYASALA, NANJANGUD மதுரை காஞ்சீபுரம்.

:: பிரபல ஜோதிஷர் :: மஹாராஜாக்களாலும், ஆயிரக்கணக்கான பிரபுக்களாலும் தங்கமெடல்களும் நற்சாட்சிப்பத்திரங்களும் பெற்றவர்.
ஒரு ஜாதகம் கணிக்க ரூ. 2. நேரில் ஒரு ஜாதகம் பார்க்க ரூ. 5. ஒரு வருஷ பலன் எழு ரூபா 5. எதிர்காலத்தைப் பற்றின 3 கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணு 8 (ஜாதகம் அல்லது எழுதும் நேரம்தேவை) (ஜ்யோதிட ஞானபோதினி விலை அணு 8. பண்டித காழியூர்,
ம. ஸ்ரீநிவாஸாசாரியார்,
218 தங்கசாலை வீதி, மதராஸ்.

வர்த்தமானம்.

அம்பலவாணரை அறிவதெப்படி ?

பல்லாவரத்தில் சென்றவாரம் நிகழ்ந்த சைவப் பொதுநிலைக் கழகவிழாவில் தலைமை வகித்த ஸ்வாமி வேதாசலம் அவர்கள் நிகழ்த்திய முடிவுரைச் சுருக்கம் வருமாறு:—"டாக்டர் பாஸ்டியன் (Doctor Bastian) என்னும் அறிஞர் அறிவிலாப் பொருள்களிலிருந்தே அறிவுடைய பொருள்கள் தோன்றுகின்றன என்று கூறியுள்ளார். டிண்டல் என்பவர் அறிவிலாப் பொருள்கள் வேறு என்றும் அறிவுடைய பொருள்கள் வேறு என்றும், அறிவிலாப் பொருள்களிலிருந்துஅறிவுடைய பொருள்கள்தோன்றமுடியாவென்றும் வகுக்கின்றார். இவ்விருபெரும் பகுப்பை இராமலிங்கசுவாமிகள் 'எப்பொருட்கும் எவ்வுயிர்க்கும்' என்ற செய்யுளடியொன்றால் விளக்கிவைக்கின்றார். அறிவுப்பொருள் அறிவிலாப்பொருள் ஆய இவ்விரண்டையும் இயக்கவல்ல பேரறிவுப்பொருள் வேறொன்றுளது. இராமலிங்கரும் "உள்ளகத்தும் வெளியகத்தும்" என்று அருளுகின்றார்.

அறிவிலாப் பொருளும் உண்மையன்று, அறிவுடைய பொருளும் உண்மையன்று. இரண்டிற்கும் மேலாய்நின்று மூலகாரணமாகின்ற பேரறிவுப் பொருள்தான் உண்மையானது. அப்பொருள்தான் கடவுள். மனிதன் செய்கின்ற அசாதாரணமான செயல்களைக் கண்டு வியக்கின்றோம். மனிதனால் நினைக்கவும் முடியாத சிருஷ்டியைச் செய்த கடவுளின் ஆற்றல் வியத்தற்குரியதன்றோ? எமன் கையிற் களிக்கின்ற நமக்குப் போதிய அறிவுபெற ஒப்வேது. நம் இந்தியாவிலோ மக்கள் பொது வயது 25 என்று கணக்கெடுக்கப்பட்டுள்ளது. மற்ற ஐரோப்பிய நாடுகளில் மக்கள் 50 வயதாவது வாழ்கின்றனர். இச்சிறு ஆயுள் உடைய மக்கள் அறிவுமுழுதும் பெறக்கூடக் காலமில்லை. எனவே நமது அறிவு அறைகுறையானது. எனவே சிற்றறிவுடைய மாந்தர் இன்பப் பொருளான இறைவனை உவகையால் உணரவேண்டும். இறைவனது இன்பம் துவக்கத்தில் இன்பமும், அந்தத்தில் துன்பமும் விளைக்கக்கூடியதன்று. அவ்வின்பம் எப்பொழுதும் ஒருபடித்தாகவே இருக்கும். இதனை மாணிக்கவாசகரும்,

"தினைத்தனை யுள்ளதோர்
பூவினிற்றே னுண்ணாதே
நினைத்தொறுங் காண்டொறும்
பேசுந்தொறும் எப்போதும்
அனைத்தெலும் புண்ணெக
ஆனந்தத் தேன்சொரியுங்
குனிப்புடை யானுக்கே
சென்றூதாய் கோத்தும்பீ"

என்னும் திருவாசகப் பாவொன்றால் விளக்குகின்றார். இவ்வியல்புகொண்ட கடவுள் நமக்கு என்றும் தாயும் தகப்பனுமாய் விளங்குகின்றார். பண்டைக்காலத்தில் கடவுளைத் தாயென்றும் தகப்பனென்றுமே அடியார்கள் வழிபட்டனர். அம்மை வணக்கம் பிற்காலத்தில் திருமால் வணக்கமாய் மாறியது. பழைய தமிழ் நூலான பரிபாடலில் திருமாலுக்குப் பத்து அவதாரங்கள் கூறப்படவில்லை. பின் வந்தவரே திருமால் வழிபாட்டை வகுத்தனர். சிவன் வேறு திருமால் வேறெனப் பிறித்தனர். பிறகு மும்மூர்த்திகள் தோன்றினர். படைக்கத் தெரிந்த கடவுளுக்குக் காத்தலும் அழித்தலும் தெரியாதோ [illegible] காணக் கடவுள் தேவையோ. [illegible] முதற் கடவுள் ஒருவனே முத்தொழிலையும் செய்கின்றான். எனவே ஒரு கடவுளைத் தாயாகவும் தகப்பனாகவும் பண்டை நாள் நம்மூதாதையர்செய்தது போல் வணங்குவதே சாலச் சிறந்ததாகும். இந்தப் பெறற்கரிய உண்மையையே இராமலிங்க சுவாமிகள்

"இயல் உண்மை அறிவு இன்ப வடிவாகி நடிக்கும்
மெய்ப் பொருளாம் சிவமொன்றேஎன்றறிந்தேன்"

என்று நம்மனோர்க்குக் காட்டுகின்றார். அவர் காட்டும் நெறி நாம் படர்வோமாக. முத்தொழிலையும் தானே தனியிருந்து புரிகின்ற முழுமுதற் கடவுள் எங்கும் பொருந்தி எல்லாவற்றையும் இயக்கிவைப்பதால் அவரை அம்பலவாணர் என்கின்றோம். அவர்தான் நடராஜப் பெருமான்.

இனி அவ்வம்பலவாணரைக் காணுதற்கு நம் உள்ளம் விழையுமல்லவா? அவரை எப்படிக் காணுவது என்பதே அடுத்த வினா? அவரைக் காண ஒரு வழிதான் உளது. அவ்வழியும் ஞானயோகம்ஆகும். உலகமானது அண்டம் எனப்படும். அதன்கண் உலவும்உடல் பிண்டம் எனப்படும். அண்டத்திற்கும் பிண்டத்திற்கும் நெருங்கிய தொடர்புண்டு. அண்டத்தில் விளங்கி அவர் திருநடனம் புரிவதுபோல் பிண்டத்திலும் நடனம் புரிகின்றார். அதனை மூச்சு ஓட்டத்தால் தெரிந்து கொள்ளலாம். மூச்சு ஓட்டமே நம்முயிர்வாழ்விற்குக் காரணமாகும். அதனை மிகுதியாகச் செலவிட்டால் ஆயுள் குறையும். மூச்சுஇயங்கும் திட்டத்தைக் கண்டே மேற்புல அறிஞர்கள் இவர் இவ்வளவு காலம் உயிர் வாழ்வார் என்று ஆயுளை உறுதி செய்கின்றனர். இதன் விரிவு திருமந்திரத்தில் மிக அழகாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. நம்முடைய உயிர் மூச்சுஇயங்கும் நாடியிலேயே நிலைத்திருக்கின்றது. முன்னம் உயிர் மூளையைப்பற்றி நிற்கின்றது என்று ஆராய்ந்து கண்டனர். ஆனால் இப்பொழுது அதனை நன்காராய்ந்து மூளையை எடுத்து விட்டாலும் உடம்பில் உயிர் நிலைத்திருப்பது கண்டு உயிரின் இருப்பிடம் சுழுமுனை நாடியேயாகும் என முடிவுகட்டினர். இந்நாடியை (Spinal chord) என்று ஆங்கிலத்தில்கூறுவர். இவ்வுண்மைகளை ஞானாசிரியர்மூலம் உபதேசம்பெற்று யோகம் பயின்று நாம் கடவுளின் திருவருளைப் பெறவேண்டும். வாழ்வின் பயன் இதுவேயாகும்.

* * *

இந்தியாச் சட்டசபைத் தலைவராயிருந்த ஸ்ரீமான் பட்டேல் சிறையினின்று மீண்டார். அவர் தேக நிலையை ஒட்டி வியன்னாவிற்குச் சீக்கிரத்தில்பிரயாணமாவார் என்று பம்பாய்ச் செய்தி கூறுகின்றது

* * *

சென்றவாரம் பண்டிதர் மோட்டிலால் நேரு இறந்துபோனார்.இந்தியாவெங்கும் அவர்மரணத்தைக் குறித்துத் துக்கம் கொண்டாடுகின்றனர்.

* * *

சங்கீத வித்வான் ஸ்ரீமான் சீனுவாஸ ராவ் அறிவிக்கின்றார்:—"அகஸ்டியன் என்னும் ஒருவர் பிடில் தம்புரா முதலிய இன்னிசைக் கருவிகளை வெகு திறமையாக அமைக்கின்றார். அவர் செய்த பிடில் புதிய தொனியுடன் இருக்கின்றது. அவர் ஆக்கிய பிடில் ஒன்று லண்டனுக்கு அனுப்பப்பெற்றுச்சங்கீத அறிஞர்களால் கொண்டாடப் பெற்றுளது. இத்தகைய சிறந்தஒருவரது கைத்தொழில்வல்லமை வீணைகாவண்ணம் சங்கீதத்தில் அபிமான முள்ளவர்கள் இன்னிசைக் கருவிச் சாலையொன்றைநிறுவி இந்தியத் தொழிலை விர்த்திசெய்யவேண்டுவது அவசியமாகும்."

188904

KALANILAYAM.
REG. NO. M, 2324.

கலா நிலயம்

1-ஆவது வால்யூம் 1928-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1. சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும் :— கட்டுரைகள் 51.
2. கம்ப ராமாயணம் :— பால காண்டம் ஆற்றுப்படல முதல் மிதிலைக்காட்சிப் படலம்வரை கட்டுரைகள் 51.
3. அகப்பொருள் வரலாறு:—காட்சி முதல், ஓதற் பிரிவுவரை கட்டுரைகள் 18.
4. காந்தார நாட்டுக் கட்டழகி :—காவிய வியல் நயம் பெற்ற நற்றமிழ் நாவல் 51 இதழ்களில் வந்துளது.
5. தமிழ்ப் பாடம் :—நளவெண்பா, சுயம் வர காண்டம் முதல் கலிதொடர் காண்டம் முடிய, 52 இதழ்களில் வந்துளது.
6. தேவாரமும் ஐந்திணையும்:—தமிழ் இலக்கண ஐந்திணைப் பாகுபாட்டைத் தேவாரத்தின் துணைகொண்டு விளக்கிய கட்டுரைகள்.
7. வானசாஸ்திரம் :—வான சாஸ்திர வுண்மையை யாவரும் அறியுமாறு வரையப்பட்ட கட்டுரைகள் 20.

மலர்வனம் பழமுதிர்சோலை, மேனாட்டுத் தத்துவ அறிஞர்களாய பிரீடரிக்நீஷேயன், எபிகுயூரன், ஜினோன், பைரோன், அரிஸ்டாட்டில் முதலானோர் தத்துவ ஆராய்ச்சி, இலக்கிய ஏற்ற ஆராய்ச்சியென்ற இலக்கியங்களை ஆயும் முறை விளக்கும் 6 கட்டுரைகள், கார்லைல் எமர்ஸன், ரஸ்கின், டால்ஸ்டாய், ஆஸ்கார் ஒயில்ட், ராபர்ட் பர்ன்ஸ் ஆனோர் கட்டுரை மொழிபெயர்ப்பு, இலக்கியக்கதைகள், நாலடி நானூற்றின் திறம், பாரசீகப் புலவர் உமார் கயாம் காட்டிவைக்கும் தத்துவநிலை, முதலிய பல வியாசங்கள்.

2-ஆவது வால்யூம் 1929-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1. கம்பராமாயணம் :—மிதிலைக்காட்சிப் படலம் முதல் பரசுராமப்படலம் முடிய 48 கட்டுரைகள்.
2. அப்பர்:—கட்டுரைகள் 50
3. வில்லி பாரதம்:—ஆதிபர்வமுதல் சபாபர்வம் வரை கட்டுரை 32.
4. ஏமாங்கதத்திளவரசன் :—காவிய நலம் பெற்ற காதற் கதை. 20 இதழ்களில் வந்துளது.
5. அகப்பொருள் வரலாறு.—காவற் பிரிவு, பொருள்வயின் பிரிவு, பரத்தையிற் பிரிவு கட்டுரைகள் 6.
6. மாறன் பாப் பாவினம்:—16 இதழ்களில் வந்துளது.
7. குலசேகரர்:—குலசேகரர் தத்துவத்தை விளக்கும் கட்டுரைகள் 23.
8. தமிழ்ப்பாடம்:—நளவெண்பா கலிநீங்கு காண்டம், திருவேங்கடமாலை, திருவரங்கத்துமாலை, திருவரங்கத்தந்தாதி, திருவரங்கக் கலம்பகம், 50 இதழ்களிலும் வந்துளது.
9. நம்மாழ்வார் வைபவம்:— கட்டுரைகள் 12.

மானத சாத்திரம், மொழிபெயர்ப்புக் கட்டுரைகள் 11, அண்டபுராணம் - காப்பி, தேயிலை புகையிலைமுதலிய சிறப்புப் படலங்கள் 5, மலர்வனம் 8, பழமுதிர்சோலை, திருவாய்மொழியின் திறம், கண்கண்டதெய்வம், உடலும் மனமும், நன்னெறியின் ஏற்றம், சிந்தாமணி நீதிச் செய்யுள் ஆய பல கட்டுரைகள்.

3-வது வால்யூம் 1930-ஆம் ஆண்டுப் பிரதிகள்.

1. கம்பராமாயணம்:— மந்திரப்படலம், மந்தரை சூழ்ச்சிப் படலம் கட்டுரை 48.
2. குறுந்தொகை:— 400 பாட்டுகளும் உரையுடன் 34.
3. தமிழ்ப்பாடம்:—கிருஷ்ணன் தூது, நைடதம், நளன் தூதுப் படலம். இலக்கணம் புணரியல் முற்றுப்பெற்றது.
4. அப்பரும் 64 கலைகளும்:—36.
5. நம்மாழ்வார் வைபவம்:—34.
6. இலஞ்சிப்பாவை: —இதழ்கள் 24.
7. ஆச்சரிய சூடாமணி:—(ஒரு மொழிபெயர்ப்பு நாடகம்) 15.
8. மானதசாத்திரம்:—(நடத்தை) 32. மொழிபெயர்ப்புக் கட்டுரைகள், சிறுகதைகள், மலர்வனம், பழமுதிர்சோலை, மாதவிமாதவம் ஆகிய பல கட்டுரைகள்.

மேற்கூறிய மூன்று வருடப் பிரதிகளும் எம்மிடம் பயிண்டு செய்தும், செய்யாமலும் கிடைக்கும்.

விலை விவரம்:—தபால் செலவு உள்பட, வால்யூம் ஒன்றிற்கு

உள்நாடு	ரூ.	அ.	ப.	வெளிநாடு	ரூ.	அ.	ப.
பையிண்டு செய்யாதது	8	0	0	பையிண்டு செய்யாதது	9	8	0
காலிகோ கில்ட்	9	8	0	காலிகோ கில்ட்	11	0	0
ஆப்லெதர் கில்ட்	10	0	0	ஆப்லெதர் கில்ட்	11	8	0

:: கலா நிலயம் ஆபீஸ், புரசைபாக்கம், சென்னை ::

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)